
ஸ்ரீதாசசார்யன்-119

ஆழ்வார் எம்பெருமானுர் ஜீயர் திருவடிகளே சரணம்



தொகுதி 9 | விபவ ஹூ | ஆவணி மீ | ஆக 88 | பகுதி 11



ஆசிரியர் :

Dr. M. A. வேங்கடகிருஷ்ணன், M.A., M. Phil., Ph. D.

7, தெற்கு மாடவீதி, திருவல்லிக்கேணி, சென்னை-600 005

தனிப்பிரதி
விலை ரூ 2-00

வருடச்சந்தா
ரூ. 20-00

வானமாமலை

நான்குநேரி என வழங்கப்படும் இந்த திவ்யதேசம் திருநெல்வேலி. நகர்கோயில் நெடுஞ்சாலையில் திருநெல்வேலிக்குத் தெற்கே 18 மைலில் உள்ளது. ஸ்ரீவரமங்கலநகர் என்றும் பெயருண்டு.

வானமாமலை தெய்வநாயகன் என்ற திருப்பெயர்களுள்ள எம்பெருமான் கிழக்கே திருமுகமண்டலமாய் வீற்றிருந்த திருக்கோலத்தில் ஸேவை தருகிறுன். தாயார் திருநாமம் ஸ்ரீவரமங்கைத் தாயார். 8 ஸ்வயம் வயக்த க்ஷேத்ரங்களுள் இதுவும் ஒன்று.

மணவாளமாமுனிகளின் பிரதான சீடரான ஒன்ருன வானமாமலை (பொன்னடிக்கால்)ஜீயர் ஸ்வாமியின் அவதாரஸ்தலம். அவர் ஸ்தாபித்த வானமாமலை மடம் ஜகத்ப்ரஸித்தி வாய்ந்தது. அம்மடத்தின் ஆதீனத்திலேயே கோயில் உள்ளது.

நம்மாழ்வார் (திருவாய்மொழி—5-7) மங்களாசாஸனம் செய்த திவ்யதேசம்.

உபதேச ரத்தினமாலை
காலக்ஷேபத் தொடக்க விழா

ஸ்ரீமான் உ வே M. A.
இதாசார்யன் ஆசிரியர் ஸ்ரீமான் உ வருடங்களாக
வேங்கடகிருஷ்ணன் கடந்த இரண்டரை வருடங்களாக
ஸ்ரீ உ. வே. சதாபிஷேகம் கோவிந்த நரஸிம்மாசாரியர்
ஸ்வாமியிடம் பகவத்விஷய காலக்ஷேபம் கேட்டு வந்தார்.
இடையில் ஒருமுறை வானமாமலைக்கு விடைகொண்
டிருந்தபோது, தமது ஆசார்யரான ஸ்ரீமத்பரமஹம்
ஸேத்யாதி (வர்த்தமான) வானமாமலை ராமானுஜஜீயர்
ஸ்வாமியால் க்ரந்தாந்வயமும அனுக்ரஹிக்கப்பெறறார்.
அப்போதே ஸ்ரீ ஜீயர்ஸ்வாமி. ஸ்ரீமான் வேங்கட
கிருஷ்ணனை. திருவல்லிக்கேணி வானமாமலை மடத்தில்
வாரம் இரண்டு நாட்கள் நிரந்தரமாக காலக்ஷேபம்
ஸாதிக்கும்படி நியமித்தார். பகவத்விஷய காலக்ஷேபம்
முடிந்து பிறகு இக்காலக்ஷேபத்தைத் தொடங்கலாம்
என்றும் ஸ்ரீ ஜீயர்ஸ்வாமி திருவுள்ளம் பற்றினார்.
அதற்கேற்ப, பகவத்விஷய காலக்ஷேபம் வெகுவிமரிசை
யாக நடைபெற்று முடிந்தவுடன் ஸ்ரீ ஜீயர்ஸ்வாமியிடம்
நேரில் விடைகொணடு ஸ்ரீமான் வேங்கடகிருஷ்ணன்
திருவல்லிக்கேணி வானமாமலை மடத்தில் காலக்ஷேபம்
தொடங்குவதற்கான நியமனத்தைப் பெற்றார். முதலில்
மணவாளமாமுனிகள் அருளிச்செய்த உபதேசரத்தின
மாலையை பிள்ளைலோகம்ஜீயர் வ்யாக்யானத்துடன் கிரந்த
காலக்ஷேபமாக நடத்துவது என்று நியமனமாயிற்று.
அதன் தொடக்கவிழா 23-7-88 சனிக்கிழமை மாலை 5
மணிக்கு நடைபெற்றது. முதல திருவல்லிக்கேணி வான
மாமலை மடம் ஸ்ரீகார்யம் என்ற முறையில அடியேன்
வரவேற்க, ஸ்ரீ உ வே வாகம்ருதவர்ஷீ வேளுக்குடி
வரதாசார்யர் ஸ்வாமி தலைமை வகித்தார். இக்
காலக்ஷேபத்தைத் தொடங்கி வைப்பதற்காகவே ஆழ்வார்
திருநகரியிலிருந்து எழுந்தருளியிருந்தார். ஸ்ரீ உ வே.
சதாபிஷேகம் கோவிந்தநரஸிம்மாசார்யர்ஸ்வாமி. இவ்விருவ
ருடைய மங்களாசாஸனத்துடன் காலக்ஷேபம் இனித
தொடங்கப்பட்டது. ஸ்ரீமதபரமஹம் ஸேத்யாதி ஜீயர்
ஸ்வாமி அனுக்ரஹித்திருந்த மங்களாசாஸன ஸ்ரீமுகமும்
ஸபையில் வாசிக்கப்பட்டது. தொடர்ந்து உபதேசரத்தின
மாலை காலக்ஷேபம் வாரந்தோறும் சனி ஞாயிறு ஆகிய
இருதினங்களும மாலை 4 மணியளவில திருவல்லிக்கேணி
வானமாமலை மடத்தில நடைபெறறுவருகிறது.

V. G ஸம்பத்குமாரன்

ஸ்ரீகார்யம், திருவல்லிக்கேணி வானமாமலைமடம்

கீதாசார்யன் ஜாதகப் பரிவர்த்தனைத் திட்டம்

ஸ்ரீவைஷ்ணவ தென்கலை, வடகலை ஜாதகங்கள் இலவசமாகப் பதிவு செய்து பரிமாறப் படும் பிரசுரிக்க ரூ 10-ம், தபால் மூலம் பதிவு செய்ய, விவரம் பெற, ஒவ்வொரு ஜாதகத் திற்கும் ரூ 2-ம் + தபால் செலவு 0. 50 M G, செய்யவேண்டு. பதிவு செய்தவர்களுக்கு மட்டும் இந்தத் தொண்டு.

K. R. ஸ்ரீனிவாசாசாரி M A.
25, தாண்டவராய முதலித்தெரு, திருவல்லிக்கேணி, சென்னை-600005,

கன்னிகைகள்

G 5248 ஸ்ரீவத்ஸம், மிருகசீர்ஷம் 28-9-64 M.Sc வீணை தெ* 5' 3''
G 5859 கௌண்டியை, ரேவதி, 19-12-58, M.A. B.Ed Teacher, தெ 5' 4'
G 5443, விஸ்வாமித்ர, மூலம், 6-5-58, PUC, Health Dept பெரியார்தாலுக்கா ரூ1000. வ 5'3'

பிரம்மச்சாரிகள்

B 4179 ஆத்ரேய, அஸ்வனி, 6-10-60, M Tech (Phd) USR தெ 5' 6' PGL Music
B 4261 கௌண்டின்ய கேட்டை, 3-1-54 B A Pro Mgr Leather Factory. ரூ 3000 வ* 5' 10'' ப வே
B 4263 கௌண்டின்ய, அஸ்வனி, 16-11-56 B E, Asst, Pro Mgr பங்களூர் ரூ 6000 வ* 5' 0'' ப
B 4266 கௌண்டின்ய, ஆயில்யம் 24-7-60 B.E (Hons) M.B A Computer Consultant ஆஸ்திரேலியா 5000 Dollars வ* 5' 7'' ப
B 4277 காசிப, ரேவதி, 26-7-59 B.A. Gay Travels ரூ 1000/-வ, வே

ஒரு சந்தேகம்-ஒரு விளக்கம்

ஆழ்வார்கள் அருளிச்செய்த நாலாயிரதிவ்யப் பிரபந்தப் பாசுரங்களுக்கு ஸ்ரீ வைஷ்ணவ ஸம்ப்ர தாயத்தில் அளிக்கப்பட்டுள்ள ஏற்றம் அனைவரும் அறிந்தவொன்று.

சமீபத்தில் ஒரு பத்திரிகையில் "திவ்யப் பிரபந்தம் மூல பாடம் மட்டும் தெரிந்தால்போதும் என்று நெட்டுருவுடன் நின்று, பொருள் புரிந்து கொள்ளும் ஆர்வம் இல்லாமல் போனதுதான் ஸ்ரீ வைஷ்ணவத்தின் அனைத்துக் கேடுகளுக்கும் காரணம்'' என்று ஸ்ரீ உ. வே. வாகம்ருதவர்ஷீ வேளுக்குடி வரதாசார்யஸ்வாமி கருத்துத் தெரிவித் துள்ளதாகப் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

இக்கருத்து திவ்யதேசங்களில் திவ்யப்பிரபந்தம் மூலம் மட்டும் அநுஸந்தானம் செய்யும் கைங்கர்யத் தில் ஈடுபட்டுள்ள அத்யாபகர்களைக் குறிப்பிடுகிறது என்று தவருக எண்ணிய சிலர் அடியேனிடம் "உண்மையிலேயேஸ்ரீ உ.வே. வரதாசார்யஸ்வாமி இப்படிப்பட்ட கருத்தைத் தெரிவித்திருப்பாரா?'' என்று கேட்டனர். அவர்கள் இவ்விஷயத்தை ஸ்ரீ உ. வே. வேளுக்குடி ஸ்வாமியிடமே கேட்டுத் தெளிவு பெற்றிருக்கலாம். ஆனல் அவர்கள் அடியேனைக் கேட்டனர். அதற்கு அடியேன் "ஸ்ரீ உ.வே. வரதாசார்யஸ்வாமி அத்யாபகர்களைப்பற்றி ஒருபோதும் தாழ்வாகப் பேசுபவர் அல்லர். பற்பல விசேஷங்களிலும் பல அத்யாபகர்களை அழைத்து ஸத்கரித்துள்ள அவர், அத்யாபகர்களைக் குறித்து இக்கருத்துக்களைக் கூறியிருக்கமாட்டார்.

அவருடைய ஷஷ்டியப்த பூர்த்தி மஹோத்ஸவம் நடந்தபோது ஸகல திவ்யதேசங்களிலிருந்தும் நூற்றுக்கணக்கான அத்யாபகர்களை வரவழைத்து ஸேவை சாற்றுமறை நடத்தி அவர்களை ஸத்கரித்திருக்கிறார். தமது திருத்தகப்பனாருடைய சதாப்தி மஹோத்ஸவத்தையும் இப்படித்தான் கொண்டாடியிருக்கிறார். ஒவ்வொரு வருஷமும் தமது திருநக்ஷத்ரத்தையும் இப்படித்தான் கொண்டாடி வருகிறார். அப்போதெல்லாம் அத்யாபகர்களை ஸத்கரிப்பதோடல்லாமல் அவர்களுடைய ஸ்ரீபாத தீர்த்தத்தையும் பிரார்த்தித்துப் பெற்றுக்கொண்டிருக்கிறார். மேலும் அவருடைய கருத்து வெளியிடப்பட்டிருக்கின்ற பத்திரிகையிலும் கோயில் என்றோ அத்யாபகர்கள் என்றோ அவர் பேசியதாக பிரசுக்கப்படவில்லை. எனவே அவர் ஒருபோதும் அத்யாபகர்களைக் குறித்து இக்கருத்துக்களைச் சொல்லியிருக்க மாட்டார்'' என்று பதில் கூறினேன். தொடர்ந்து, இதுபற்றி ஸ்ரீ உ. வே. வாகம்ருதவர்ஷீ ஸ்வாமியிடமே கேட்டபோது அவர் கூறியவை:

''ஆழ்வார் திருநகரியில் நடந்த கருத்தரங்கு ஒன்றில் ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாயத்தில் 'ப்ராம்மண அப்ராம்மண ஜாதிப்ரச்னை' பற்றி விவாதம் நடந்தது. அப்போது பேசிய சிலர் ''குலந்தாங்கு சாதிகள் .. , ''எவரேலுமவர் கண்டீர் ... ''தொழுமினீர் கொடுமின் கொண்மின்... என்று சில பாசுரங்களை மேற்கோள் காட்டிச் சில தவறான விளக்கங்களை கூறினார்கள். அடியேன் பேசும்போது, ''இப்பாசுரங்களை மட்டும் மேற்கோள் காட்டினால்

போதாது; இப்பாசுரங்களுக்குப் பூர்வாசார்யர்கள் அருளிச்செய்துள்ள வ்யாக்யானங்களையும் ஆழ்ந்து நோக்கினால்தான் அப்பாசுரங்களின் உண்மையான கருத்துக்கள் நமக்குப் புலப்படும். பாசுரங்களின் அர்த்தங்களைத் தெரிந்துகொள்ளாமல் பாசுரங்களை மட்டும் நெட்டுருப்போட்டு மேற்கோள் காட்டுவது சரியல்ல. இப்படிப்பட்ட பிரச்னைகள் எழுவதற்குக் காரணமே சில பாசுரங்களை மட்டும் நெட்டுருப் போட்டு, அவற்றின் அர்த்தங்களை உள்ள படி தெரிந்துகொள்ளாமல் தவறான விளக்கங்களை அளிப்பதுதான்!'' என்றுதான் அடியேன்பேசினேன். ஆக, அக்கருத்தரங்கில் அடியேன் தெரிவித்த கருத்துக்கள், ஆழ்வார்கள் பாசுரங்களுக்கு உள்ளபடி அர்த்தம் தெரிந்துகொள்ளாமல் தவறான அர்த்தங் கள் கூறுபவர்களைக் குறித்ததே தவிர, திவ்யதேசங் களில் அத்யாபக கைங்கர்யங்களில் ஈடுபடுபவர் களைக் குறித்து அல்ல. அக்கருத்தரங்கின் முன் பின் நிகழ்ச்சிகளை நன்றாக கவனித்தவர்களுக்கு இது நன்கு புரியும். அத்யாபகர்களைப் பற்றிய சர்ச்சை எதுவும் அங்கு எழாததால் அத்யாபகர்களைப்பற்றி அங்கு அடியேன் குறிப்பிடுவதற்குப் ப்ரஸக்தியும் இல்லை. மேலும், நீர் கூறியுள்ளதுபோல் அத்யாபகர் களை மிகவும் கௌரவ்யர்களாகக் கருதும் அடியேன், அவர்களைத் தகுந்தபடி ஸத்கரித்தும் வருகின்ற அடியேன் ஒரு போதும் அவர்களைப்பற்றி அப்படிக் குறிப்பிட்டதில்லை. அர்த்தங்களைத் தெரிந்து கொள்ளாமல் அநுஸந்தானம் மட்டும் செய்பவர்கள்

எந்தச் சீர்கேடுகளுக்கும் காரணமாவதில்லை. ஆனால் தவறான அர்த்தங்களைக் கூறுவதுதான் அதற்குக் காரணமாகும். நாலாயிர திவ்யப்பிரபந்தப் பாசுரங்களைக் கற்கும் ஆர்வமுடையோர் அனைவருமே அவற்றின் அர்த்தங்களையும் உள்ளபடி தெரிந்து கொள்ளவேண்டும் என்ற ஆர்வமும் அமையப் பெற்றவர்களாக ஆவர்களாயின், நமது ஸ்ரீ வைஷ்ணவஸம்ப்ரதாயம் மேன்மேலும் வளர்ச்சி அடையும் என்பதே அடியேனுடைய அபிப்ராயம்'' என்று கூறினார் ஸ்ரீ உ.வே. வரதாசாரியர் ஸ்வாமி. இதில் அடியேனுக்கும் உடன்பாடே.

—ஆசிரியர்

ஸ்ரீவைஷ்ணவம்

ஐந்துபடியான மோக்ஷோபாயங்களில் ஒன்றான ப்ரபத்தி (ந்யாஸம, சரணாகதி என்றும் அழைக்கப்படுவது) ஆர்த்தப்ரபத்தி, த்ருப்தப்ரபத்தி என்று இருபடிப் பட்டிருக்கும. அதில் ஆர்த்தப்ரபத்தி நமது ஆழ்வார் களுடையபடி. பேற்றுக்குத் துடித்து எம்பெருமானைத் தடுத்தும் வளைத்தும் அதைபெறப்பார்ப்பது இவர்கள் நிலை. இவர்கள் ஆர்த்தப்ரபந்நர்கள் நாதமுனி, யாமுநமுனி முதலான நமது பூர்வாசாரியர்கள் த்ருப்தப்ரபந்நர்கள். த்ருப்தபரபத்தியின் முக்யலக்ஷணமாவது - எம்பெரு மானையே உபாயமாகப்பற்றினபின் பேறுதப்பாது என்று

Dr.V. V ராமானுஜம்

திடமாகநம்பி, அவன் உகந்து அப்பேற்றையநுக்ரஹிக்கும் வரை பொறுத்திருக்கை. ஸம்ஸாரத்தின் - சரீரஸம்பந் தத்தின் – கொடுமையையுணர்ந்து, எம்பெருமானைக்கிட்டி "இத்தைநீ அறுத்துத்தர வேணும்" என்று அவனையே உபாயமாக வரித்து அவன் காரியம் செய்து தரும்வரை நம்பிக்கையுடன் இருக்கும் நாள் உகந்தருளிய நிலங்களில் கைங்கர்யமும் குணாநுபவமுமாகச் செலல வேண்டும். இது த்ருப்தப்ரபத்திலக்ஷணம்.

"மாறி மாறிப் பலபிறப்பும் பிறந்து" என்கிறபடியே எண்ணிறந்த பலபிறப்புகளில் தாவரம், பசு, பக்ஷி, மனிதன் என்று பலவிதமான சரீரங்களில் பிறந்து, முடிவில் ஒரு சரீரத்தில் பகவத்க்ருபையால் ஞானம் பிறநது அதாவது ஸம்ஸாரத்தின் கொடுமை மனதில் பட்டு மேலே இன்னுமொரு சரீரமெடுத்து புண்யபாபபலமான இன்ப துன்பங்களையநுவிப்பதில் ஆசை இல்லாமல் வைராக்யம் பிறந்து, "எங்கே மீண்டும் பிறவிச் சுழலில சிக்கித்தவிக்க வேணுமோ?" என்று பயந்து. பகவதநுக்ரஹமடியாக ஒரு ஸதாசார்யனைக் கிட்டி அவனுபதேசத்தால் உண்மை நல் ஞானம் பெறுகிறோம். ஆசார்யனானவான், ஞான மநுட்டானம் நன்றாகவேவுடையனாய் தனதுநலன் பாராது

ஸம்ஸாரியின் துர்கதியொன்றையே பார்த்து இவனது நலனிலே கண்வைத்து, இவனறியாதனவற்றை அறிவிக்கும் உபகாரகன். பகவானே ஆசார்யனாக அவதரித்து சேதனர்களை உய்விக்கிறான் என்று அறியவேணும்.

இந்த ஸதாசார்யனானவன் முறைப்படி தாபம் முதலான ஐந்து ஸம்ஸ்காரகளின் மூலம் வைஷ்ணவ பாஹ்யலக்ஷணங்களைச் செய்து வைத்து ஆந்தரமான விசேஷார்த்தங்களையும் உபதேசிக்கிறான்- பாஹ்யலக்ஷணங்களாவன திருவிலச்சினை திருமண்காப்பு முதலான வெளி அடையாளங்கள். ஆசார்யனுபதேசித்தபடி த்வயமென்னும் மந்த்ரரத்நத்தை அநுஸந்திப்பதனால் பெரியபிராட்டியாரை புருஷகாரமாக முன்னிட்டு எம்பெருமானை பேற்றுக்கு உபாயமாகப்பற்றுவது ''உபாயஸ்வீகாரம்'' என்பர். இப்படி உபாயஸ்வீகாரம் பண்ணியவன் விபரீதப்ரவ்ருத்தனாதல் தவிர்க்கவேணும். அதாவது தகாதவற்றைச் செய்வதினின்றும் விலகியவனாதல் வேணும். இப்படி விலக்கவேண்டியவை சப்தாதி விஷயங்களில் (கண்காது முதலானவற்றால் அநுபவிக்கும் விஷயங்களில்) பற்று, எம்பெருமானைத் தவிர்த்தவேறு உபாயங்களில் ஸம்பந்தம் ஸர்வேச்வரனையொழித்த இதர தேவதைகளைத் தொழுதல், அவற்றைத் தொழுபவரோடு தொடர்பு, அஹங்கார மமகாரமடியாக(நான், எனது என்ற எண்ணத்தினடியாக) வரும் எல்லாச் செயல்கள், பாகவதர்கள் திறந்து குற்றம் செய்தல் முதலானவைகள்.

உபாயஸ்வீகாரம் பண்ணின ப்ரபந்நன் வேதவிஹிதமான வர்ணாச்ரம தர்மாநுஷ்டானமுடையவனாயிருத்தல் வேணும். ''ச்ருதிஸ்ம்ருதிர் மமைவாஜ்ஞா'', வேதம் அதையடியொற்றிய ஸ்ம்ருதிகள் இவைபகவானுடைய கட்டளை 'இதைச் செய்; இதைச் செய்யாதே'' என்று கட்டளையிடு

(தொடர்ச்சி 42-ம் பக்கம்)

பகவத்விஷய காலக்ஷேபம்

ஸ்ரீ உ.வே. சதாபிஷேகம் கோவிந்தநரஸிம்மாசாரியர் ஸ்வாமி திருவல்லிக்கேணி ஸ்ரீபார்த்தஸாரதி; ஸ்வாமி திருக்கோயில் நம்மாழ்வார் ஸன்னிதியில் சுமார் இரண்டரை வருடங்கள ஸம்ப்ரதாயமுறை வழுவாமல் பகவத்விஷய காலக்ஷேபம் ஸாதித்தது பற்றி கடந்த ஆனி இதழில் எழுதியிருந்தோம். அப்படி ஸம்ப்ரதாய முறையில் காலக்ஷேபம் நடத்துவது எப்படி என்று விளக்க மஹா ஸ்ரீ சதாபிஷேகம் ஸ்வாமியே விரிவான கட்டுரை ஒன்று எழுதியிருக்கிறார். அக்கட்டுரை திருநாங்கூர் வைகுந்த விண்ணகரம் ப்ரதிவாதி பயங்கரம் திருமாளிகை ஸேவா ஸபையின் 9-வது ஆண்டு விழா மலரில் வெளி யிடப்பட்டுள்ளது. அக்கட்டுரையிலிருந்து சில பகுதிகள :

ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாயத்தில் காலக்ஷேபம் நடத்தும் முறை

''காலக்ஷேபம் என்கிற சொல் காலத்தைக் கடத்துதல்'' என்னும் பொருளில் ''ஸம்ஸ்க்ருத திராவிட வேதாந்த க்ரந்தங்களின் வ்யாக்யாநங்களை ஓர் ஆசார்யன் மூலமாக சிஷ்யர் கேட்பது'' என்பதிலேயே ரூடமாக நம்பூர்வாசார்யர்களால் கொள்ளப்பட்டிருக்கிறது.

இவ்வித காலக்ஷேபத்துக்கு முறையுண்டு. அதாவது ''ஸ்ரீபாஷ்யம்'' முதலான ஸம்ஸ்க்ருத வேதாந்த க்ரந்தங்களையும், ஸ்ரீவசநபூஷணாதி ரஹஸ்யக்ரந்தங்களையும், காலை வேளையில்தான் காலக்ஷேபம் நடத்தவேணும். இரண்டு வேளையும்

நடந்தால்தான் க்ரந்தம் சீக்கிரம் முடிவடையும் என்கிற நிர்பந்தமிருந்தால் காலை காலக்ஷேபத்தின் போதே பங்க்தி ஸேவித்து விட்டு பிற்பகல் நடத்தலாம்.

எக்காரணத்தைக் கொண்டும் ஸம்ஸ்கிருத வேதாந்த க்ரந்தங்களையும் ரஹஸ்ய க்ரந்தங்களையும் இரவில் காலக்ஷேபம் நடத்தக்கூடாது.

இதிஹாஸ புராணங்களை இரவில் காலக்ஷேபம் நடத்தலாம்.இதுதான் காலக்ஷேபம் நடத்தும் முறை.

காலக்ஷேபம் ஸாதிப்பவர் (சொல்லுபவர்) தாம் காலக்ஷேபம் கேட்டவராயிருக்கவேணும். அவர் காலக்ஷேபம் நடத்துமிடத்தில் கிழக்கு நோக்கியோ வடக்கு நோக்கியோ உட்கார்ந்து தான் காலக்ஷேபம் ஸாதிக்கவேணும், இந்நியமம் ஸந்நிதிகளில் காலக்ஷேபம் நடத்தும்போது பின் பற்றப்படுவதில்லை. காரணம் ஸந்நிதி அமைப்பு இந்நியமத்தைப் பின்பற்ற முடியாமலிருப்பதே. ஸ்வாமி மணவாள மாமுனிகளை ஸ்ரீ ரங்கநாதன் ஆசார்யனைக் கொண்டு பகவத் விஷய காலக்ஷேபம் கேட்டபோது ஆசார்யரான மணவாள மாமுனிகளை வடக்கு முகமாக வீற்றிருக்கப்பண்ணி மூலவரான பெரிய பெருமாள் அர்சை நிலையில் படுத்திருப்பதை மாற்றிக் கொண்டு எழுந்து உட்கார்ந்து கேட்க முடியாதாகையால் தம் உத்ஸவரான அழகிய மணவாளனை வெளியில் புறப்பட்டு அவரை கிழக்கு

முகமாக நின்று கேட்கப் பண்ணி தாம் சயனித்த நிலையிலேயே காலக்ஷேபம் ஸாதிக்கும் மாமுனிகளை அநுபவித்து வந்தார். நாதமுனி தொடங்கி மாமுனிகள் பர்யந்தமுற்ற நம் பூர்வாசார்யர்கள் தாங்கள் பிறருக்கு உபதேசிப்பதை தாங்களும் கடைபிடித்தே வந்தார்கள்.

காலக்ஷேபம் ஸாதிப்பவர் (சொல்பவர்) காலக்ஷேபம் நடக்குமிடத்தில் மதுரகவியின் மேல் (சிக்குபலகை) ஏட்டுச் சுவடியையோ ஸ்ரீகோசத்தையோ எழுந்தருளப்பண்ணிவிட்டு (வைத்துவிட்டு) முதலில் தண்டன் ஸமர்ப்பிக்க வேண்டும். அப்போது காலக்ஷேபம் கேட்பவர்களும் தண்டன் ஸமர்ப்பிக்க வேண்டும். பிறகு ''ஸ்ரீசைலேச'' தனியன் தொடங்கி, தன் ஆசார்யன் தனியன் வரை அந்தந்த க்ரந்தங்கள் தங்களுக்கு வந்த ஆசார்ய பரம்பரை தனியன்களுடன் உரக்க அநுஸந்திக்க வேணும். (சொல்லவேணும்). காலக்ஷேபம் கேட்பவர்களும் அப்படியே அநுஸந்திக்கவேணும்.

தனியன்அநுஸந்தாநம்முடிந்ததும்காலக்ஷேபம் ஸாதிப்பவர் தண்டனிட்டு அமர்ந்த பிறகு மற்றையார்கள் தண்டனிட்டு எல்லாரும் உட்கார்ந்த பிறகு, காலக்ஷேபம் ஸாதிப்பவரும் கேட்பவர்களும் அந்தந்த க்ரந்தத்துக்கான தனியனை, உரக்கச் சொல்லவேணும். ஆனால் அவர்கள் குரல் காலக்ஷேபம் ஸாதிக்கும் ஸ்வாமியின்குரலை

அழுத்தி விடக்கூடாது. கேட்பவர்கள் க்ரந்தம் வைத்துக் கொள்வதானால் மதுரகவியின் மேலேயே வைத்துக்கொள்ள வேணும். மடியிலோ தரையிலோ வைத்துக்கொள்ளலாகாது.

க்ரந்தம் வைத்துக்கொண்டு காலக்ஷேபம் கேட்கைக்கு அதிகாரிகள் ப்ராஹ்மண ஸ்ரீவைஷ்ணவ குலத்திற் பிறந்து க்ரந்தாந்வயம் (தன் ஆசார்யன் தனக்கு க்ரந்தங்களையும் அவைகளுக்குண்டான தனியன்களுடன் ஆரம்பித்து வைப்பது) ஆனவர்களாயிருக்க வேணும். மற்றையார் க்ரந்தம்வைத்துக் கொள்ளக்கூடாது. திறமையிருந்தால் காலக்ஷேபம் கேட்ட பிறகு தங்கள் தங்கள் க்ருஹத்தில் க்ரந்தம் வைத்துக் கொண்டு பார்க்கலாம், கேட்ட அர்த்தம் மனதில் தரிப்பதற்காக.

காலக்ஷேபம் ஸாதிக்கும் ஸ்வாமி காலக்ஷேபம் ஸாதிப்பார். க்ரந்தத்தில் எவ்வளவுபாகம் அன்றைய தினம் முடிந்திருக்கிறதோ அந்த பாகத்தை காலக்ஷேபம்முடியும்போதுக்ரந்தம்வைத்துக்கொண்டு கேட்பவர்களில் ஒருவர் ஸுஸ்வரமாக (இனிமையுடன்) அதற்கேற்பட்ட முறையில் பங்க்தி ஸேவிக்க வேணும். அவர்பங்க்தி ஸேவிக்கும்போது காலக்ஷேபம் ஸாதிப்பவர் ஏதாவது சொல்ல விட்டிருந்தால் நடுவில் நிறுத்தச் செய்து அதைச் சொல்லுவர். பிறகு பங்க்தி முழுதும் ஸேவித்து முடிக்க வேணும். பிறகு எல்லோரும் எழுந்து நிற்கவேணும். அந்தந்த

க்ரந்தங்களுக்குக் காலக்ஷேப முடிவில் அநுஸந்திக்க வேண்டும் தனியன்கள் சிலவுண்டு அவைகளை காலக்ஷேபம் ஸாதிப்பவரும் கேட்கிறவர்களும் மற்றவர் காதுகேட்கச் சொல்லி காலக்ஷேபம் ஸாதிப்பவர் தண்டனிட்டு எழுந்த பிறகு மற்றையார் எல்லாரும் தண்டனிட வேணும். ஒவ்வொருவராக காலக்ஷேபம் ஸாதிக்கும் ஸ்வாமி அருகில் வந்து அநுமதி பெற்றுப் போக வேணும். அப்போது தங்கள் ஸந்தேஹங்களைக் கேட்கலாம். காலக்ஷேபம் ஸாதிக்கும் ஸ்வாமி எழுந்தருளும் போதும், அவர் நின்று கொண்டிருக்கும் போதும் மற்ற யாரும் உட்கார்ந்திருக்ககூடாது.

ஆக, இவ்வளவும் ஸ்ரீ சதாபிஷேகம் ஸ்வாமி எழுதிய கட்டுரையில் உள்ள சில பகுதிகளாகும். (ஷ கட்டுரையில் இன்னும பல விஷயங்கள் எழுதப்பட்டிருந்தாலும் அவை விரிவையும், விவாதத்தையும் தவிர்ப்பதற்காக இப்போது பிரசுரிக்கப்படவில்லை.) பெரும்பாலும் மேலே பிரசுரித்துள்ள முறையிலேயே திருவல்லிக்கேணியில் பகவத்விஷய காலக்ஷேபம் நடைபெற்றது.

(இன்னும் வரும்)

ராசி பலன்

சுபஸ்ரீ விபவ வருஷம் ஆவணி மாதம்
(17-8-1988 முதல் 16-9-88 வரை)

மேஷம் : (அசுவணி, பரணி, கார்த்திகை¼) குடும்பத்தில் குதூகலம் நிறைந்து காணப்படும். எடுத்த காரியங்கள் எளிதில் வெற்றி அடையும் நிலம், வீடு, பூமி போன்றவற்றால் லாபம் ஏற்படும். விவசாயங்களில் முன்னேற்றம் காணலாம். பொதுவாக நற்பலன் காணும் மாதம் இது.

பூவிருந்தவல்லி பிச்சுமணி

ரிஷபம் : (கார்த்திகை¾, ரோகிணி, மிருகசீரிடம்½) தங்களது குழந்தைகள் மூலம் நற்பலன்களை அடைய முடியும். எதிர் பாராத யோகங்களைப் பெறவேண்டும். மனைவி மற்றும் மைத்துனர்கள் வழியில் தக்க உதவிகளைப் பெற முடியும். பொதுவாக இந்த மாதம் சகல காரியங்களும் நன்மையாகவே நடக்கும்.

மிதுனம்: (மிருகசிரீடம்½, திருவாதிரை, புனர்பூசம்¾) தகப்பனாரின் உடல் நலம பாதுகாக்க வேண்டும். தங்களது பேச்சு வார்த்தைகளில் கவனம் தேவை. எதிர்பாராத விதமான செலவுகளை ஏற்க வேண்டியது வரும். கூட்டுத் தொழிலில் எச்சரிக்கை தேவை இந்த மாதம் நிதானம், கவனம் மிகவும் தேவை.

கடகம் : (புனர் பூசம்¼, பூசம், ஆயில்யம்) குடும்பத்தில் குழப்பங்கள் அவ்வப்போது ஏற்படலாம். புத்திரர்கள்

மூலம் அதிகச் செலவுகளை ஏற்க வேண்டியது வரும். உடல் நலத்தில் கவனம் தேவை. புதிய தொழில்களை தற்போது ஆரம்பிக்க வேண்டாம், பொதுவாக நிதானம் தேவை.

சிம்மம் : (மகம், பூரம், உத்திரம் ¼) கோர்ட், வழக்குகளில் ஈடுபடாமல் இருப்பது அதிக நலம். அவ்வப்போது மனக்குழப்பங்கள் ஏற்படலாம், மருந்து சம்பந்தமான வழிகளில் அதிக செலவுகளும் ஏற்படலாம். உடல்கவனம் பிரயாணங்களில் எச்சரிக்கையும் தேவை. பொதுவாக தெய்வ சிந்தனை நலம் தரும்.

கன்னி : (உத்திரம் ¾, அஸ்தம், சித்திரை ½) சகோதர வழிகளில் ஆதாயங்களை எதிர்பார்க்கலாம். எதிர் பாராத விதமான பிராயணம் நன்று அமையலாம், பெரியோர்களின் ஆசிகள் கிடைக்கும். பழைய கடன்கள் தீர்ந்துவிடும். பலரது உதவிகள் தக்க சமயத்தில் கிடைக்கும், சந்தோஷமான மாதம்.

துலாம் : (சித்திரை ½, சுவாதி, விசாகம் ¾) பேச்சு வார்த்தைகளில் அதிகம் கவனம் தேவை. உஷ்ண சம்பந்தமான வியாதிகள் வராமல் பாதுகாத்துக் கொள்வது நலம் தரும். மாத மத்தியில் நல்ல செய்திகளை எதிர்பார்க்கலாம். குடும்பத்தில் சுப விரயங்கள் ஏற்படும். பொதுவாக நன்மை தீமை கலந்த மாதம்.

விருச்சிகம் : (விசாகம் ¼, அனுஷம், கேட்டை) உடல் நலத்தில் அதிக கவனம் தேவை, தொழில் முன்னேற்றம் இருக்கும். கூட்டுத்தொழிலில் லாபம் காணலாம். மாத மத்தியில் எதிர்பாராத யோகம் அடைய வாய்ப்புகள் உண்டு. பொதுவாக நலம் காண வாய்ப்புகள் ஏற்படும்.

தனுர் : (மூலம், பூராடம். உத்திராடம் ¼) எதிர் பாராத தனலாபங்கள் ஏற்பட வாய்ப்புகள் உண்டு. மனைவியின் மூலம் தக்க உதவிகளையும் பெறுவீர்கள். பூமி லாபங்களும் ஏற்படும். கௌரவம்-புகழ் பட்டம் யாவும் சிறந்து விளங்குகிறது.

மகரம் : (உத்திராடம் ¾, திருவோணம், அவிட்டம் ½) குடும்பத்தில் அவ்வப்போது மனஸ்தாபங்கள் ஏற்படலாம். சகோதர வகையில் எச்சரிக்கை தேவை. புத்திர பாக்யம் சிறந்து விளங்குகிறது. மைத்துனர் மனைவி வகையில் எதிர் பாராத வகையில் சிலவுகளை ஏற்க வேண்டியது வரும். கவனம் தேவை.

கும்பம் : (அவிட்டம் ½, சதயம், பூரட்டாதி ¾) தகப்பனுர் வழியில ஆதரவுகள் குறையும். இடமாறுதல்கள் இருக்கும பெரியோர்களிடம் ஆதரவு தேடுவது நலம் தரும். பிரயாணங்களில் எச்சரிக்கை தேவை. மேற்கு திசை பலிதம் தரும். மாத இறுதியில் பலரது உதவிகளும் கிடைக்கும். கவலை வேண்டாம்.

மீனம்: (பூரட்டாதி ¼, உத்திரட்டாதி, ரேவதி) நீதி மன்றங்கள் போகவேண்டாம். ஜாமீன் போன்றவற்றில் ஈடுபட.லாகாது. உஷ்ண சம்பந்தமான வியாதிகள இரததக் கொதிப்பு போன்றவைகள் வரலாம். கவனம் தேவை. கூட்டுத்தொழிலில் எச்சரிக்கை தேவை. மனைவி, மைத்துனர் மூலம் தக்க உதவிகளும் கிடைக்கலாம்.



வெண்ணெய்க்கு ஆடும் பிள்ளை

17. நம்மாழ்வாரும் நவனீதமும்

உலகம் யாவையும் தாமுளவாக்கலும் நிலை பெறுத்தலும் நீக்கலும் நீங்கலா அலகிலா விளையாட்டுடையான் என்று எம்பெருமானைப் போற்றுகிறார் கம்பர். அப்படி உலகைப் படைத்து, காத்து, அழிக்கும் செயல்களைத் தன் விளையாட்டாகவுடையவன் கண்ணனுக

பேராசிரியர்
ம.A. வெங்கடகிருஷ்ணன்

அவதரித்து வெண்ணெயுண்டதை அருளிச்செய்கிறார் நம்மாழ்வார்:

உயிரினால் குறைவில்லா உலகேழ்தன்னுள் ஒடுக்கித்
தயிர்வெண்ணெயுண்டானை (திருவாய்மொழி 4-8-11)

என்று. இங்கு 'உலகேழ் தன்னுள் ஒடுக்கித் தயிர் வெண்ணெய் உண்டானை' என்றுள்ள சொற்சேர்த்திக்கு நம்பிள்ளை அருளிச்செய்துள்ள வ்யாக்யானம் மிகமிக ரஸமானது: "தயிரும் வெண்ணெயும் களவுகாணப் புகுகிறபோது செருப்புவைத்துத் திருவடி தொழுவாரைப் போலே அந்யபரதைக்கு உடலாகவொண்ணாது என்று எல்லாலோகங்களுக்கும் வேண்டும் ஸம்விதானம் தன் ஸங்கல்பத்தாலே செய்து பிள்ளையாயிற்று

வெண்ணெயமுது செய்தது''—என்பது அவ்விடத்து ஸ்ரீ ஸூக்தி. காலில் செருப்போடே கோவிலுக்குச் செல்பவர்கள் கோபுரவாசல் புடையிலே செருப்பை விட்டுவிட்டு உள்ளே புகுந்து பெருமாளை ஸேவிக்கும்போதும் செருப்பு பத்திரமாக இருக்குமோ இருக்காதோ என்று அதே நினைவாய், ''ஸ்வாமிந் ஸ்ரீசடகோபன் ஸாதிக்க!'' என்ன வேண்டும்போதும் ''ஸ்வாமிந் செருப்பு ஸாதிக்க'' என்பர்களாம். அதுபோல எம்பெருமானும் உலகங்களைக் காப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்யாமல் வெண்ணெய் களவு காணப்புகுந்தால் இடையிடையே அந்த உலகங்களுக்கு ஒன்றும் வராமல் இருக்கவேண்டுமே என்ற நினைவே உண்டாகி, வெண்ணெய் ரஸிக்காமலே போய்விடுமாம். எனவே எல்லா உலகங்களுக்கும் வேண்டியவற்றை முதலில் தன் ஸங்கல்பத்தாலே செய்துவிட்டுப் பிறகுதான் தயிர் வெண்ணெய் உண்டான் என்கிறார் நம்பிள்ளை.

இதே சொற்சேர்த்திக்கு மற்றொரு வகையாகவும் உரையருளி, எம்பெருமான் வெண்ணெய் அமுது செய்ததற்கு ஒரு காரணத்தையும் கூறுகிறார் நம்பிள்ளை: ''கர்ப்பிணிப்பெண்கள் வயிற்றில் பிள்ளைக்கீடாக போஜனாதிகள் பண்ணுமாபோலே உள்விழுங்கின லோகங்களுக்கு ஜீவனமாகத் தயிர் வெண்ணெய் உண்டான்''—என்று. கர்ப்பிணிப்பெண்கள் தங்களுக்காக என்றல்லாவிட்டாலும், தங்கள் வயிற்றில் வளரும் குழந்தைகளுக்காக புஷ்டியான, இனிய பதார்த்தங்களை உண்பது போல எம்பெருமானும் தன் வயிற்றில் ஒடுக்கின லோகங்களுக்கு உணவாகத் தயிர்வெண்ணெய் உண்டானும். இங்கு இப்படியிருக்க வேறொரு பாசுரத்தில் வெண்ணெயுண்டதற்கு வேறொரு காரணத்தை எம்பெருமானே ஆழ்வாரிடம் கூற அவர் அதை ஒப்புக்கொள்ளாமல் ஆழ்வாரே சரியான காரணத்தையும் கூறுகிறார்.

எம்பெருமானோடு கூடப்பெறவேணுமென்ற ஆசை கொண்டு எம்பெருமானுக்குத் தூதுவிட்டார் நம்மாழ்வார் 'அஞ்சிறைய மடநாராய்' என்கிற திருவாய் மொழியிலே (1-4). உடனே எம்பெருமான் அவரோடு கலப்பதற்கு வர, அவனுடைய பெருமையையும், தன்னுடைய தாழ்வையும் நினைத்து, "உன்னோடு கலப்பதற்கு எனக்குத் தகுதியேது?" என்று நைச்யாநு ஸந்தானம் பண்ணி அகலப்பார்க்கிறார் 'வளவேழுலகு' என்கிற அடுத்த திருவாய்மொழியிலே. அதிலே ஒரு பாசுரம் (1-5-8).

உண்டாயுலகேழ் முன்னமே உமிழ்ந்துமாயையால்புக்கு
உண்டாய்வெண்ணெய்சிறுமனிசர் உவலையாக்கைநிலையெய்தி
மண்தான் சோர்ந்ததுண்டேலும் மனிசர்க்காகும்பீர் சிறிதும்
அண்டாவண்ணம்மண்கரையநெய்யூண்மருந்தோமாயோனே

இப்பாசுரத்திற்கு ஸ்ரீ உ. வே. மஹாவித்வான் ப்ரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசாரியர் ஸ்வாமி அருளியுள்ள திவ்யார்த்த தீபிகை உரை மிகமிகரஸமாக அமைந்துள்ளது. இதை அப்படியே அனுபவிப்போம்:

இப்பாட்டின் ஸந்நிவேசத்தை ஊன்றி நோக்கு மிடத்து எம்பெருமானுக்கும் ஆழ்வார்க்கும் விநோத மானவொரு ஸம்வாதம் நிகழ்ந்தமை நன்கு புலப்படும்.

கீழ்ப்பாட்டில் எல்லை கடந்த நைச்யாநு ஸந்தாநம் பண்ணிப் பின்வாங்கின ஆழ்வாரை எம்பெருமான் நல்லதோருபாயத்தினால் தன்னோடு பொருந்தவிட்டுக் கொள்ளவேணுமென்று பார்த்து அவரோடே பேசத்தொடங்கினான். "வாரீர்ஆழ்வீர்!

என்னுடைய செயல்களெல்லாம் உமக்கு நன்ருய்த் தெரியுமன்ரே?'' என்ருன். அவற்றை எம்பெருமான் வாய்கொண்டே கேட்கவேணுமென்னும் விருப்ப முடைய ஆழ்வார் ''உன்னுடைய செயல் எனக்கு ஒன்றும் தெரியாது'' என்ருர்.

எம்பெருமான்: இப்படி நீர்சொல்வது மெய்தானு? இப்படியும் பொய் சொல்லலாமா? இப்போது கேட்கிறேன்; சொல்லும். நான் ஒரு காலத்திலே உலகங்களெல்லாவற்றையுமெடுத்து வயிற்றி னுள்ளே அடக்கிவைத்துப் பிறகு வெளிப்படுத்தினே னென்பதும் திருவாய்ப்பாடியிலேபுக்கு வெண்ணெய் விழுங்கினேனென்பதும் உமது காதில் விழுந்த தில்லையா? உண்மையாகச் சொல்லும்.

ஆழ்வார்: ஆம். கேட்டிருப்பதுண்டு. ''நளிர்மதிச் சடையனும் நான்முகக் கடவுளும் தளிரொளி யிமையவர் தலைவனுமுதலா, யாவகையுலகமும் யாவருமகப்பட, நில நீர் தீ கால் சுடரிருவிசும்பும், மலர்சுடர் பிறவுஞ் சிறிதுடன் மயங்க, ஒரு பொருள் புறப்பாடின்றி முழுவதுமகப்படக் கரந்து, ஓராலிலைச் சேர்ந்த எம்பெருமாமாயனையல்லது, ஒரு மா தெய்வம் மற்றுடையமோ யாமே'' என்றும், ''மத்துறு கடைவெண்ணெய்களவினில் உரைவிடை யாப்புண்டு'' என்றும் அடியேனே சொல்லியு மிருக்கிறேனே!

எம்பெருமான்: ஆழ்வீர்! இவ்விரண்டு காரியமும் நான் எதற்காகச் செய்தேன் தெரியுமா? உலகங்

களை உண்டுமிழ்ந்து வெண்ணெயுண்டது எதற்காக? ஆராய்ந்து சொல்லும் பார்ப்போம்.

• •

ஆழ்வார் : உன்னுடைய காரியங்களுக்கெல்லாம் காரணமறிவார் யார்? ஏதோ உன் திருவுள்ளத்தில் தோன்றின காரியங்களையெல்லாம் நீ செய்து கொண்டிருக்கிருய். எனக்கொன்றும் காரணம் தெரியாது.

எம்பெருமான் : உமக்குத் தெரியாதாகில் நான் சொல்லக் கேட்கலாமன்ரூே? சொல்லுகிறேன் கேளும். பிரளயங்கொள்ளாதபடி உலகங்களை வயிற்றிலடக்கி நோக்கினேன்; பிரளயம் நீங்கின வாறே அவ்வுலகங்களை வெளிப்படுத்தினேன்; உள்ளடக்கியிருந்த வுலகங்களில் வெளிப்படாமல் உள்ளேயே மிச்சமாய் நின்றுவிட்டது ஏதேனு மிருந்தாலுமிருக்கக்கூடும்; அந்த மண்ணும் கரைந்து வெளிவந்து விடட்டுமென்றே திருவாய்ப் பாடியில் வெண்ணெயும் நெய்யும் உண்டேன் காணும்!

ஆழ்வார் : இது யாரை மயக்குகிற வார்த்தை? உலகமுண்டுமிழ்ந்தது எப்போதோ போயிற்று; வெண்ணெயுண்டது மற்றெப்போதோ ஆயிற்று; அதற்கும் இதற்கும் என்ன ஸம்பந்தம்? திண்ணைக் குத் தேள் கொட்டத் தீர்த்தமிடாவுக்கு நெறி கட்டிற்று என்னுமாபோலே நல்ல கார்யகாரண பாவம் சொல்லுகிருய் பிரானே!

எம்பெருமான் : நான் வெண்ணெயுண்டதற்கு என்ன காரணமிருக்கும்? நீர் சொல்லும் என்றால் எனக்குத் தெரியாதென்கிறீர், உள்ள காரணத்தை நானே சொன்னாலும் இது அஸம்பாவிதமென்கிறீர்! நான் சொல்லுகிற காரணம் தவறாக இருந்தால் நீர் தாம் ஆலோசித்து ஒரு காரணம் சொல்லும்.

ஆழ்வார் : ஆச்ரிதர்களின் ஸம்பந்தம் பெற்ற வஸ்துவே உனக்கு தாரகமாதலால் வெண்யுண்டாயத்தனை. இதுதான் காரணம். வேறு காரணம் பரிஹாஸ்யம்,

எம்பெருமான்: ஆழ்வீர்! ஆச்ரிதர்களின் வஸ்துவே நமக்குத் தாரகமென்பதை நீர் நன்கு அறிந்திருக்கிறீரன்றோ? உம்முடைய உடலும் எனக்கு அந்த வெண்ணெய் போன்றதே காணும். இதுவே எனக்குத் தாரகங்காணும். ஆனபின்பு நீர் உம்மைக் கொண்டு அகல்வீராகில் திருவாய்ப்பாடியில் வெண்ணெயூண்விலக்கினார் புக்க லோகம் புகுவீரத்தனை. இனி நம்மை அணுகப்பாரும்.

இங்ஙனம் எம்பெருமான் சோதிவாய் திறந்து சொல்லிவிட்ட பின்பு மேலே, ஒன்றும் வாய்திறக்க வழியில்லாத ஆழ்வார் எம்பெருமானது கருத்தைத் தாம் அறிந்தமை தோற்றவும் மேலே காட்டின ஸம்வாதம் வெளிப்படவும் பாங்காக இப்பாசுரம் அருளிச்செய்கிற அழகு பாரீர்! இவ்வளவு ஆழ்ந்த கருத்தை அழகாகக் கண்டுபிடித்து வியாக்கியானங்

கள் அமைத்தருளின பூருவாசாரியர்களின் மதிக்கு மண் விண்ணெல்லாங்கூடி விலைபோருமோ?

இவ்வளவும் திவ்யார்த்த தீபிகையுரையில் ஸ்வாமி ஸாதித்துள்ளவை.

உண்மையில் எம்பெருமானுக்கு ஆழ்வார் திருமேனியில் உள்ள ஆசை வெண்ணெயின் பேரிலுள்ள ஆசை போலேயோ என்ற கேள்விக்கு ஆழ்வாரே வேறொரு பாசுரத்தில் விடை தருகிறார்.

வைகலும்வெண்ணெய் கைகலந்துண்டான்
பொய்கலவாது என்மெய்கலந்தானே
(திருவாய்மொழி 1-8-5)

'எப்போதும் வெண்ணெயை விரும்பி அமுது செய்பவன் மெய்யாகவே எனது மேனியிலே கலந்தான்; திருவாய்ப்பாடியில் வெண்ணெய் அவனுக்கு எவ்வளவு இனிமையாக இருந்ததோ அவ்வளவு இனிமையாக இருந்தது என்னுடைய உடல் அவனுக்கு' என்கிறார் நம்மாழ்வார். ஆக நம்மாழ்வாரும் நவனீதமும் ஒன்று என்பது எம்பெருமான் திருவாக்கால் வந்ததுபோலவே ஆழ்வார் திருவாக்காலும் உறுதிப்பட்டது. அதனால் தான் அவன் அடியவர்கள் கைபட்ட பொருளான வெண்ணெயை அடைவதற்குப் பட்டபாடுகளைவிட நம்மாழ்வாரை அடைவதற்கு அதிகமாகவே பட்டான் போலும்!

(தொடரும்)

பழநடை விளக்கம்

முற்காலத்திலே நம்மாழ்வார் நாதமுனிகளுக்கு உடையவருடைய பவிஷ்யதாசார்ய விக்ரஹத்தைக் கொடுத்தருள, அந்த விக்கிரஹம் உய்யக்கொண்டார் மணக்கால்நம்பி ஆளவந்தார் திருக்கோட்டியூர் நம்பி அவர் குமாரத்தி அத்துழாயம்மன் இவர்களிடங்களிலே இருந்தது. பின்பு அத்துழாயம்மனை யநுவர்த்தித்துக் கிடாம்பியாச்சான் அந்த பவிஷ்யதாசார்ய விக்ரஹத்தைப்பெற்றிருந்தார். ஆக நம்மாழ்வார் நாதமுனிகளுக்காக ஏறியருளப பண்ணின விக்ரஹம் (1), 'உடையவர் தாமே திருநாராயணபுரத்திலே ஐம்பத்திருவருக்காக ஏறியருளப்பண்ணின விக்ரஹம் (2), கந்தாடையாண்டான் ஸ்ரீபெரும்பூதூரிலே ப்ரதிஷ்டைபண்ணின உடையவர் ஆலிங்கனவிக்ரஹம் (3), பின்பு கந்தாடையாண்டான் முன்பு உடையவர் நியமனத்தினலும பின்பு நம்பெருமாள் நியமனத்தினலும் திருப்பள்ளி படுத்தவிடத்திலே ஏறி யருளப்பண்ணின விக்ரஹம் (4). ஆகவிக்ரஹங்கள் நாலும் ஆதியிலே யுண்டானது. பின்புகந்தாடையாண்டானும்பட்டரும் உடையவருடைய திருவாதிரை திருநக்ஷத்திரத்தை மாஸந்தோறும் மஹோத்ஸவமாக நடத்திக்கொண்டிருந்தார்கள்.

பின்பு திருவேங்கடநாட்டிலிருந்த அனந்தாழ்வான் முதலானோரும், கிழக்குதிக்கிலிருந்த எச்சான் முதலானோரும் தெற்குதிக்கான பாண்டிய நாட்டிலிருந்த திருக்கோட்டியூர் நம்பி குமாரர் யாமுனாசார்யரும், சொக்கத்தேவர் திருமாலையாண்டான குமாரரான சுந்தரத்தோளுடையார் முதலானோரும் மே நாட்டிலிருந்த சேரமாசியாண்டான் மருதூர்நம்பி தொண்டனூர் நம்பி முதலானோரும் மற்றும் தேசாந்திரத்திலுள்ள ஸ்ரீவைஷ்ணவர் களெல்லாம் திரண்டு பெருங்கூட்டமாகக் கோயிலிலே வந்து உடையவருடைய பிரிவாலே மிகவுங்க்லேசித்து பின்பு பட்டரை ஸேவித்து தங்கள க்லேசமெல்லாந் தீர்ந்து பட்டரையே எம்பெருமானாராகக் கண்டு தங்களுக்கு வேண்டுமிஷ்டார்த்தங்களையும்கேட்டுக்கொண்டு அந்த உகப்பாலே

(தொடர்ச்சி 30ம் பக்கம் பார்க்க)

திவ்யப்பிரபந்தத் தெளிவுரை

ஆண்டாள் அருளிச்செய்த

நாச்சியார் திருமொழி

உரையாசிரியர் :

Dr. M. A. வேங்கடகிருஷ்ணன்

நாச்சியார் திருமொழி

நாச்சியாரான ஆண்டாள் அருளிச் செய்த திருமொழி நாச்சியார் திருமொழி எனப்படுகிறது.

கீழ் திருப்பாவையில் ஆண்டாள் "எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும் உன்றன்னோடு உற்றோமே யாவோம் உனக்கே நாமாட் செய்வோம்" என்று கண்ணபிரான் திருவடிகளில் குற்றேவல் புரிவதையே ஆசைப்பட்டாள். ஆயினும் கண்ணபிரான் இவள் விருப்பத்தை உடனே நிறைவேற்றித் தருவதற்கு முன் வராமையினால் கலக்கம் அடைந்த ஆண்டாள், பிரிந்தவர்களைக் கூட்டுகையே இயல்பாக உடைய மன்மதன் காலிலே விழுகிறாள் இப்பிரபந்தத்தின் முதல் திருமொழியில்.

பெரியாழ்வார் திருமகளான ஆண்டாள் மறந்தும் புறந்தொழா திருக்க வேண்டியிருக்க வேறொரு தேவதையின் காலில் வழுகை பொருந்துமோ எனின், பொருந்தும். கண்ணபிரானோடு விரைவில் சேரப் பெறவேணும் என்கிற ஆசையின் மிகுதியினால் கலக்கமடைந்து இவள் படுகிற பாட்டைக் கண்டு, "நம்மை ஆசைப்பட்டன்றோ இவள் இவ்வளவும் படுகிறாள்!" என்று அவன் மகிழ்வதற்கு இவை உறுப்பாகும். இப்படி வழியல்லாவழியே முயற்சி செய்தாகிலும் கண்ணபிரானோடு கலக்கவேண்டும் என்று ஆண்டாள் துடிக்கிறாள் என்பதே இப்பிரபந்தத்தில் வெளியிடப் படுகிறது. இவ்வளவு ஆசையுடைய ஆண்டாளைக் கண்ணபிரான் உடனே ஏற்றுக்கொள்ளாமல் துடிக்க விடுவது எதற்காக எனில், இவள் திருவாக்கினின்றும் அமுதமன்ன பாசுரங்கள் இன்னும் பல வெளிவந்து உலகை உய்விகக வேண்டுமென்பதற்காகவே.

ஆண்டாள் திருவடிகளே சரணம்



ஆழ்வார் எம்பெருமானார் ஜீயா திருவடிகளே சரணம்

ஆண்டாள் அருளிச்செய்த
நாச்சியார் திருமொழி
(தனியன்)

**அல்லிநாள் தாமரைமேல் ஆரணங்கினின்றுணைவி
மல்லிநாடாண்ட மடமயில்-மெல்லியலாள்
ஆயர்குலவேந்தனாகத்தாள் தென்புதுவை
வேயர்பயந்த விளக்கு.**

அப்போதலர்ந்த இதழ்களையுடைய தாமரைப்பூவில் பொருந்தியிருக்கும் பெரிய பிராட்டிக்குத் தோழியும் திருமல்லி நாட்டை (குணத்தாலே) ஆள்கின்ற அழகிய மயில் போன்றவளும் மென்மையானவளுமான ஆண்டாள் இடைகுலத் தலைவனை கண்ணபிரான் நெஞ்சிலுள்ளவளாயும், அழகிய ஸ்ரீவில்லிபுத்தூரில் வேயர்குலத்தில் உதித்தவரான பெரியாழ்வாராலே பெறப்பட்ட விளக்காயும் இருக்கிறாள்.

**கோலச் சுரிசங்கை மாயன் செவ்வாயின் குணம்வினவும்
சீலத்தினள் தென்திருமல்லிநாடி செழுங்குழல்மேல்
மாலைத்தொடை தென்னரங்கருக்கீயு மதிப்புடைய
சோலைக்கிளியவள் தூயநற்பாதம் துணை நமக்கே.**

அழகிய சுரிசங்கமான ஸ்ரீபாஞ்சஜன்யத்தை நோக்கிக் கண்ணபிரானுடைய சிவந்தவாயின் தன்மையைக்கேட்கும் தன்மையுடையவளும், தென்திசையிலுள்ள திருமல்லி நாட்டுக்குத் தலைவியும், தனது செழுமை தங்கிய திருக்குழலில் சூட்டப்பட்ட மாலையைத் திருவரங்கனுக்குச் சமர்ப்பிக்கும் மேன்மையுடையவளும், சோலையில் வளரும் கிளிபோல் இனியபேச்சை யுடையவளுமான ஆண்டாளுடைய தூய்மையானதும், இனியதுமான திருவடிகள் நமக்கு என்றும் தஞ்சம்,

நாச்சியார் திருமொழி

முதல் திருமொழி

தையொரு திங்களும் தரைவிளக்கித்
தண்மண்டல மிட்டு மாசி முன்னாள் *
ஐயநுண்மணற்கொண்டு தெருவணிந்து
அழகினுக்கலங்கரித்தனங்கதேவா *
உய்யவு மாங்கொலோ என்று சொல்லி
உன்னையுமும்பியையுக் தொழுதேன் *
வெய்யதோர் தழலுமிழ் சக்கரக்கை
வேங்கடவற் கென்னை விதிக்கிற்றியே. 1

காமதேவா! தைமாதம் முழுவதும் நீ எழுந்தருள வேண்டிய இடத்தை மெழுகி குளிர்ந்த மண்டலாகாரமான மேடை அமைத்து, மாசிமாதத்தின் முதல் பக்ஷத்தில் அழகிய சிறுமணல்களினால் தெருக்களை அழகாக அலங்கரித்து "நாம் உஜ்ஜீவிக்கலாமோ?" எனக்கருதி உன்னையும் உன்னுடைய தம்பியையும் தொழுதேன். நெருப்புப் பொறிகளை உமிழும் சக்கராயுதத்தைக் கையிலேந்திய திருவேங்கடமுடையானோடு என்னைச் சேர்க்க வேணும்.

கண்ணபிரானோடு சேர வேண்டுமென்று திருப்பாவையில் நோன்பு நோற்ற ஆண்டாள் அவனை அடையப் பெறுமையினாலே ஆற்றாமை அதிகரிக்கப் பெற்று பிரிந்தவர்களைச் சோப்பிக்கும் மன்மதன் காலில் விழுந்தாவது கண்ணனை அடைவோம் எனக் கருதி. அந்த மன்மதனை ஆராதிப்பதற்காக அவன் வரவேண்டிய தெருக்களை சிறு மணல்களால் அலங்கரித்து, மண்டல பூஜைக்காக மண்டலாகாரமான மேடை அமைத்து. அவனையும் அவன் தம்பியையும் வணங்கி "என்னைத் திருவேங்கடமுடையானோடு சேர்த்து விட வேண்டும்" என்று வேண்டுகிறாள்.

வெள்ளை நுண்மணற் கொண்டு தெருவணிந்து
வெள்வரைப்பதன் முன்னந்துறை படிந்து *
முள்ளுமில்லாச் சுள்ளியெரிமடுத்து
முயன்றுன்னை நோற்கின்றேன் காமதேவா *
கள்ளவிழ் பூங்கணை தொடுத்துக்கொண்டு
கடல்வண்ணனென்பதோர் பேரெழுதி *
புள்ளினை வாய்பிளந்தானென்பதோர்
இலக்கினில் புகவென்னையெய்கிற்றியே. 2

• •

மன்மதனே! வெளுத்த சிறிய மணல்களைக் கொண்டு தெருக்களை அலங்காரம்செய்து கிழக்கு வெளுப்பதற்கு முன்பே நீர்த்துறைகளில் முழுகி முட்கள் இல்லாத சுள்ளிகளை நெருப்பிலிட்டு (ஹோமம் செய்து) இப்படிப்பட்ட முயற்சிகளாலே நோன்பு நோற்கின்றேன். தேன்பெருகும் மலரம்புகளைத் தொடுத்து அதில் கண்ணபிரானுடைய திருநாமத்தை யெழுதி, 'கொக்கு வடிவம் கொண்டு வந்த அசுரனுடைய வாயைக் கிண்டவன்' என்னும் குறியாகிற அக்கடல்வண்ணனோடு நான் சேரும் படியாக அவ்வம்புகளை எய்யவேண்டும்.

'மன்மதனே! உன்னைக்குறித்து நோன்புநோற்பதற்காக வெண்மணல்களைக் கொண்டு வீதிகளை அலங்கரித்தும், நாட்காலே நீராடியும், ஸமித்துக்களை நெருப்பிலிட்டும் வழிபாடுகள் செய்கின்றேன். உன்னுடைய கரும்புவில்லிலே அரவிந்தம், அசோகம், மா, நவமல்லிகை கருநெய்தல் ஆகிய ஐவகை மலரம்புகளையும் தொடுத்துக் கண்ண பிரானோடு நான் சேரும்படியாக அவன் மீது எய்யவேணும் என்று வேண்டுகிறாள் ஆண்டாள்.

மத்த நன்னறுமலர் முருக்கமலர் கொண்டு
முப்போது முன்னடி வணங்கி *
தத்துவமிலியென்று நெஞ்செரிந்து
வாசகத்தழித்துன்னை வைதிடாமே *
கொத்தலர் பூங்கணை தொடுத்துக் கொண்டு
கோவிந்த னென்பதோர் பேரெழுதி *
வித்தகன் வேங்கடவாண னென்னும்
விளக்கினில் புகவென்னை விதிக்கிற்றியே. 3.

மன்மதனே! நல்ல ஊமத்தமலர்களையும் முருக்க மலர்களையும் கொண்டு மூன்று வேளைகளிலும் உன் அடியை வணங்கி, 'இவன் பொய்யான தெய்வம்' என்று கூறி மனம் கொதித்து, வாய்கொண்டு உன்னை நிந்திக்க வேண்டாதபடி, கொத்துக் கொத்தாக அலர்கின்ற பூக்களை உன் வில்லில் தொடுத்துக் கோவிந்தன் என்கிற பெயரையும் அதில் எழுதி, அற்புதனான திருவேங்கடமுடையான் எனும் விளக்கிலே நான் சேருமபடி செய்யவேணும்.

காமதேவனே! உனக்கு மிகவும் பிடித்த மலர்களான ஊமத்த மலர்களையும், முருக்கமலர்களையும் கொண்டு மூன்றுகாலங்களிலும் உன்னை வழிபட்டேன். அதற்குப் பலனாக நீ என் விருப்பத்தை நிறைவேற்றாவிடில் எனது நெஞ்சுகொதித்து வாயாலும் உன்னைப் பொய்யான தெய்வம், மெய்யே பலம் கொடுப்பவனல்ல என்று நிந்திக்க வேண்டிவரும். அப்படிப்பட்ட அவமானம்உனக்குநேராத வண்ணம் மலரம்புகளை எய்து திருவேங்கடமுடையானோடு நான் சேரும்படி செய்யவேணும் என்று வேண்டுகிறாள்.

சுவரில் புராணநின்பே ரெழுதிச்
சுறவநற் கொடிக்களுந்துரங்கங்களும்*
சுவரிப்பிணாக்களுங் கருப்பு வில்லும்
காட்டித் தந்தேன் கண்டாய் காமதேவா*
அவரைப்பிராயந் தொடங்கி
என்று மாதரித்தெழுந்தவென் தடமுலைகள்*
துவரைப்பிரானுக்கே சங்கற்பித்துத்
தொழுது வைத்தேனொல்லை விதிக்கிற்றியே, 4

பிரிந்தவர்களைக் கூட்டவல்லவனாகப் புராணங்களில் சொல்லப்பட்ட மன்மதனே! சுவரிலே உனது பெயர்களையெழுதி உனதுமீனக்கொடிகளையும், குதிரைகளையும் உனக்குச் சாமரம் வீசுகின்ற பெண்களையும் கரும்பாகிய வில்லையும் உன்னுடையவை களாகக் காட்டிக் கொடுத்தேன். இளம் பருவமே தொடங்கி அக்கண்ணபிரானையே எப்போதும் விரும்பிக் கிளர்ந்த எனது பருத்த முலைகளை த்வாரகைக்குத் தலைவனான அக்கண்ணபிரானுக்கே அனுபவிக்கத்தக்கவை என்று தீர்மானித்து தொழுகின்றேன். இதைவிரைவில் நிறைவேற்றவேணும்.

கண்ணபிரானைக் காணவேணுமென்னுசையுலடய நான் அவனைக் கண்டபின்பு உன்னை மறவாமலிருக்குமபொருட்டு உன்னையும் உன் பரிவாரங்களையும் சுவரில் எழுதிவைத்தேன். இளம்பருவமே தொடங்கி அக்கண்ணபிரானையே விரும்பிக்கிளர்ந்த எனது முலைகளை அக்கண்ணபிரானுக்கே அனுபவிக்கத்தக்கவை என்று தீர்மானித்து விட்டேன். இனி இம்முலைகள் அவனுடையவை ஆகையால் அவற்றைத் தொழுகின்றேன் (அவனுக்கென்று ஸங்கல்பித்தால், பின்னை அவன் குணங்களோபாதி உபாஸ்யமாமித்தனையிறே என்பது பெரியவாச்சான்பிள்ளை உரை). இனி இம்முலைகள் செவ்வியழிவதற்கு முன்னம விரைவில் என்னை அவனோடு சேர்ப்பாயாக என்று வேண்டுகிறாள்.

வானிடை வாழுமவ்வானவர்க்கு
　　மறையவர் வேள்வியில் வகுத்தவவி *
கானிடைத்திரிவதோர் நரிபுகுந்து
　　கடப்பதும் மோப்பதும் செய்வதொப்ப *
ஊனிடையாழிசங்குத்தமர்க்கென்றி
　　உன்னித்தெழுந்தவென்தட முலைகள் *
மானிடவர்க்கென்று பேச்சுப்படில்
　　வாழகில்லேன் கண்டாய் மமதனே. 5

மன்மதனே! தேவலோகத்தில் வாழ்கின்ற தேவர்களுக்காக அந்தணர்கள் யாகத்தில் கொடுத்த ஹவிஸ்ஸைக் காட்டிலே திரிகின்ற நரியொன்று வந்து கடந்தும் மோந்தும் கெடுப்பதுபோல, திருவாழியையும் திருச்சங்கையுமணிந்த புருஷோத்தமனுக்காகக் கிளர்ந்த எனது பருத்த முலைகளானவை, வேறு சில மனிதர்களுக்கு உரியனவாகப் பேச்சு எழுமானல் நான் உயிர் வாழ்ந்திருக்க மாட்டேன்.

அந்தணர்கள் அனுஷ்டிக்கும் யாகங்களில் தேவர்களுக்காக வைக்கப்பட்டிருக்கும் புரோடாசத்தை (ஹவிஸ்ஸை) மிகவும் அற்ப ஜந்துவான ஒருகாட்டு நரி வந்து காலால் கடந்தும், மூக்கால் மோந்தும் செய்தால், அதன் புனிதம் கெட்டு விடுவது போல, கண்ணபிரானுக்காகவே கிளர்ந்தெழுந்த என்னுடைய முலைகளை சாதாரண மனிதர்களுக்கு அனுபவிக்கத்தக்கவை என்று சிலர் பேசத் தலைப்பட்டாலும், அவற்றின் புனிதம் கெட்டுவிடும். எனவே ஒருமனிதனுக்கு என்னைத் தாரைவார்த்துத்தரலாம் என்றபேச்சு எழுமானலும் நான் உயிர்வாழ்ந்திருக்க மாட்டேன் என்கிறள் ஆண்டாள்.

உருவுடையாரிளையார்கள் நல்லார்
  ஒத்துவல்லார்களைக் கொண்டு * வைகல்
தெருவிடையெதிர் கொண்டு
  பங்குனிநான்திருந்தவேநோற்கின்றேன் காமதேவா*
கருவுடைமுகில்வண்ணன் காயாவண்ணன்
  கருவிளை போல் வண்ணன்* கமலவண்ணத்
திருவுடை முகத்தினில் திருக்கண்களால்
  திருந்தவே நோக்கெனக்கருள் கண்டாய். 6

மன்மதனே! அழகிய வடிவும், இளம்பருவமும் காமசாத்திரத்தில் வல்லமையும் உடையவர்களை முன்னிட்டுக் கொண்டு நான்தோறும் நீ வரும்வழியில் எதிரே சென்று பங்குனிமாதத்துப்பெரிய திருநாளிலே உன்னைக்குறித்து நன்ருகவேநோன்பு நோற்கின்றேன். கருவிலே நீருடைய மேகம் போன்றவனும் காயாம் பூவும், கருநெய்தல் பூவும் போன்றவனுமான கண்ண பிரான் தனது செந்தாமரை மலர் போன்ற திருமுகத்திலுள்ள திருக்கண்களால் நன்ருக என்னைக் கடாக்ஷிக்கும்படி செய்யவேணும்.

மன்மதனே! 'வேதம்வல்லார்களைக் கொண்டு விண்ணோர் பெருமான் திருப்பாதம் பணிந்து' என்கிறபடி வேதவித்துக்களை முன்னிட்டுக் கொண்டு எம்பெருமானை அடிபணிவது போல காமசாத்திரத்தில் வல்லவர்களை முன்னிட்டுக் கொண்டு உன்னைக் குறித்து நோன்பு நோற்கின்றேன். கரியமேகம் போலவும், காயாம் பூப்போலவும், கருவிளைமலர் போலவும் நிறமுடைய கண்ணபிரான் தனது திருக்கண்களால் என்னைக் கடாக்ஷிக்கும்படி செய்யவேண்டும் என்று வேண்டுகிருள்.

காயுடைநெல்லொடு கரும்பமைத்துக்
கட்டியரிசியவலமைத்து *
வாயுடைமறையர் மந்திரத்தால்
மன்மதனே! உன்னைவணங்குகின்றேன் *
தேசமுன்னளந்தவன் திரிவிக்கிரமன்
திருக்கைகளாலென்னைத் தீண்டும் வண்ணம் *
சாயுடை வயிறுமென் தடமுலையும்.
தரணியில் தலைப்புகழ் தரக்கிற்றியே. 7

மன்மதனே! பசுங்காய்நெல்லும், கரும்பும், கருப்புக் கட்டியும், பச்சரிசியும், அவலும் ஆகிய இவற்றைச்சமைத்து, காமசாத்திரத்தில் வல்லவர்களுடைய நல்ல ஸ்வரத்தோடு கூடிய மந்திரத்தினால் உன்னை வணங்குகின்றேன். முன்னொருகால மூவுலகங்களையுமளந்தவனான திரிவிக்கிரமன் என்னுடைய ஒளியுடைவயிற்றையும், மென்மையான முலைகளையும் தனது திருக்கையால் தீண்டும்படி பண்ணி, இப்பூமண்டலத்தில் அழியாப்புகழை நான் பெறும்படி செய்யவேணும்.

மன்மதனே! ''செந்நெலரிசி, சிறுபருப்பும், செய்த அக்காரம் நறுநெய்பாலால்'' என்று எம்பெருமானைக்குறித்து நோன்பு நோற்பது போல் உனக்குப் பசுங்காய் நெல், கரும்பு, கருப்புக்கட்டி, பச்சரிசி இவற்றைச்சமைத்து காமசாத்திரத்தில் கூறிய முறை வழுவாமல் உன்னைக் குறித்து நோன்பு நோற்கின்றேன். முன்பு யாரும் அபேக்ஷியாதிருக்கச்செய்தே உலகையெல்லாம் தீண்டிய எம்பெருமான், இப்போது தனது திருக்கைகளால் என்னைத் தீண்டும்படி செய்து 'எம்பெருமானாலே தீண்டப் பெற்றவள் இவள்' என்ற நிலையான புகழை எனக்குப் பெற்றுத் தருவாயாக என்று வேண்டுகிறாள்.

மாசுடையுடம்பொடுதலையுலறி
வாய்ப்புறம்வெளுத்தொருபோதுமுண்டு *
தேசுடைத்திறலுடைக் காமதேவா
நோற்கின்ற நோன்பினைக் குறிக்கொள்கண்டாய் *
பேசுவதொன்றுண்டிங் கெம்பெருமான்
பெண்மையைத் தலையுடைத்தாக்கும் வண்ணம் *
கேசவநம்பியைக்கால்பிடிப்பாளென்னும்
இப்பேறெனக்கருள்கண்டாய். 8

பிரிந்தவர்களைச் சேர்ப்பதில் திறலுடைய மன்மதனே! அழுக்குப்படிந்த உடம்போடு, தலையை விரித்துக்கொண்டு, உதடுகள் வெளுப்பாகப் பெற்று, ஒருவேளை மட்டுமே உண்டு, நான் நோற்கின்ற நோன்பை நீ குறிக்கொள்ள வேணும். இப்போது நான் சொல்லவேண்டுவது ஒன்றுண்டு. என்னுடைய பெண்மையை நிலைத்திருக்கும்படி செய்வதற்காக 'கண்ணபிரானுக்கு இவள் கால்பிடிப்பவள்' என்னும் பேற்றை எனக்கு உண்டாக்கித் தரவேணும்.

மன்மதனே! கண்ணபிரானோடு கலக்கப்பெறாத வருத்தத்தினால் உடம்பில் அழுக்கேறுவதையும் பொருட்படுத்தாமல் தலையில் மயிர்களை விரித்துக்கொண்டு, உதடுகள் வெளுத்தது, ஒருவேளை மட்டுமே உண்டு, இப்படி நான் மிகவருந்தி நோன்பு நோற்பதை நீநினைவில்கொள்ள வேண்டும். என்னுடைய ஸத்தையை ஜீவித்திருக்கும்படி செய்யவேண்டுமானால், 'கண்ணபிரானுக்குக் கால்பிடிப்பவள் இவள்' என்னும் பேற்றை எனக்கு நீ உண்டாக்கித் தரவேணும் என்று வேண்டுகிறாள் ஆண்டாள்.

தொழுதுமுப்போது முன்னடி வணங்கித்
    தூமலர் தூய்த் தொழுதேத்து கின்றேன் *
பழுதின்றிப்பார்க்கடல் வண்ணனுக்கே
    பணிசெய்து வாழப் பெறாவிடில் நான் *
அழுதழுதலமந்தம்மாவழங்க
    ஆற்றவுமதுவுனக்குறைக்குங்கண்டாய் *
உழுவதோ ரெருத்தினை நுகங்கொடுபாய்ந்து
    ஊட்டமின்றித்துரந்தாலொக்குமே

மூன்றுகாலங்களிலும் உன்னைத்தொழுது பூஜித்து உன்பாதங்களில்நல்லபூக்களைத்தூவித்துதிக்கின்றேன். பூமியைச் சூழ்ந்த கடல்போன்ற நிறமுடைய கண்ண பிரானுக்குக் குற்றமொன்றுமில்லாமல் கைங்கர்யம் பண்ணி வாழப் பெறாமல் போவேனாகில், நான் பலகாலும் அழுது, 'அம்மா' என்று கதறிக்கொண்டு துடிக்க, அந்தப்பாதகம் உன் தலைமேல் ஏறும்; அப்படி என்னைத்துடிக்க விடுவது உழுகின்ற எருதை நுகத்தடியால் தள்ளி, தீனியில்லாமல் ஓட்டிவிடுவதைப் போலாகும்.

மன்மதனே! மூன்றுவேளைகளும் உனக்குப் பூக்களைப் பணிமாறி உன்னைப் பூஜித்தேன். இத்தனை செய்தும் நீ என்னைக் கண்ணபிரானோடு சேர்க்காமல் போவாயாயின் நான் வருத்தம் மேலிட்டு மிகவும் அழுது, அம்மா வென்று கதற நேரிடும். இப்படி என்னைத் துடிதுடிக்கச் செய்த பாதகம் உன்னைச் சேரும். நான் இன்றுவரை உனக்குச் செய்த பணிவிடைகளை ஏற்றுக் கொண்டு என்காரியத்தை முடிக்காமல் என்னை துடிக்கச் செய்வது, உழவன் ஒருவன் தன் ஜீவனத்திற்காக ஒரு எருதிடத்தில் நன்றாக வேலையை வாங்கிக் கொண்டு பின்பு அதற்குத் தீனியிடாமல் நுகத் தடியால் அடித்துத் தள்ளி ஓட்டுவது போலாகும்.

கருப்புவில் மலர்க்கணைக் காமவேளைக்
  கழலிணை பணிந்தங்கோர் கரியலற *
மருப்பினையொசித்துப் புள்வாய் பிளந்த
  மணிவண்ணற்கென்னை வகுத்திடென்று *
பொருப்பன்ன மாடம்பொலிந்து தோன்றும்
  புதுவையர்கோன் விட்டுசித்தன் கோதை *
விருப்புடையின்றமிழ் மாலைவல்லார் 10
  விண்ணவர்கோனடி நண்ணுவரே.

கரும்பாகிற வில்லையும் பூக்களாகிற அம்பையு
'கம்ஸ
முடைய மன்மதனுடைய பாதங்களை வணங்கி
னுடைய யானை அலறும்படியாக அதன் கொம்புகளை
முறித்தவனும் பகாஸுரனுடைய வாயைக்
கீண்டவனும் நிலமணி போன்றவனுமாகிய கண்ண
பிரானுக்கு என்னை அடிமைப் படுத்த வேணும் என்று
அழகிய மாடங்கள் நிறைந்த ஸ்ரீவல்லிபுத்தூர்க்குத்
தலைவரான பெரியாழ்வார் மகளாகிய ஆண்டா
ளுடைய விருப்பமடியாகப் பிறந்த இனிய இத்
தமிழ்ப்பாசுரங்களை ஓதவல்லவர்கள் நித்யஸூரிகள்
நாதனான எம்பெருமானைக் கிட்டப் பெறுவர்கள்.

தன்னைக் கொல்வதற்காகக் கம்ஸனால் ஏவப்பட்ட
யானையையும்,
பகாஸுரனையும் குவலயாபீடம் எனும்
கொன்ற கண்ணபிரானுடன் தன்னைச் சேர்க்கவேண்டும்
என்ற விருப்பத்தைத் தெரிவித்து மன்மதனுடைய பாதங்
களை வணங்கி அருளிச் செய்யப்பட்ட இத்திருமொழியைக்
கற்பவர்கள் தன்னைப்போலே எம்பெருமானை அனுபவிப்
பதற்காக மற்றொரு தேவதையின் காலிலே
விழவேண்டாமல் ஸம்ஸாரத்தை விட்டு நித்யஸூரி
களுக்குச்சமமாக எம்பெருமானை அனுபவிக்கப் பெறுவர்
கள் என்று இத்திருமொழி கற்றார்க்குப்பலம் சொல்லித்
தலைக் கட்டுகிறாள் ஆண்டாள்.

நாச்சியார் திருமொழி—இரண்டாம் திருமொழி

திருப்பாவையில் ஆண்டாள் கோபிமார் பாவனையில் நோன்பு நோற்றது போலவே கீழ்த்திருமொழியிலும் கோபிமார் பாவனையிலேயே மன்மதனை வணங்கி வழி பட்டாள். இப்படிக் காமனைக்குறித்து நோன்பு நோற்பதைக் கண்ட கண்ணபிரான் "இக்கோபிகை களுடன் கூடுவதற்கு நாம் வருந்தி முயற்சிகள் செய்ய வேண்டியிருக்க நம்மைப் பெறுவதற்கு இவர்கள் வருந்தி முயற்சிகள் செய்கிறார்களே! மேலும் இவர்கள் நம்மைப் பெறுவதற்காக வேறொரு தேவதையின் காலில் விழுவதை நாம் பார்த்துக் கொண்டிருக்கலாமோ? இவ்வாய்ப் பாடியில் மழைபெய்வதற்காக ஆயர்கள் இந்திரனுக்குச் சோறு கொண்டுப்போய் இடுவதைக்கண்டு, 'நாம் பிறந்து வளருகிற ஊரிலே வேறொரு தேவதைக்குப் பூஜை நடை பெறலாமோ! என்று அந்தச்சோற்றை கோவர்த்தன மலைக்கே இடும்படி செய்து கோவர்த்தனமலையாக இருந்து அச்சோறு முழுவதையும் உண்ட நாம், நமக்கே மிகவும் ஆட்பட்டவர்களான இக்கோபிகைகள் வேறொரு தேவதையின் காலில் விழுவது நமக்குப் பொல்லாங்கு' என்று கருதி ஓடி வந்து முகம் காட்டினான். ஆனால் இவர் களோ கண்ணபிரானுடன் ஊடல்கொண்டு இவனைக் காணாதவர்கள் போல் மணல் வீடுகள் கட்டிச்சிற்றில் விளை யாட்டு விளையாடிக் கொண்டிருந்தனர். தன்னை அவர்கள் கவனியாமல் வேறொன்றில் கவனம் செலுத்துவதைக் கண்ட கண்ணபிரான் அந்தச் சிற்றில்களைக் காலால் உதைத்துக் கலைக்க முற்பட, இவர்கள் அவனை அப்படிச் செய்ய வேண்டாமென்று தடுக்க இப்படியாக ஒரு மஹா பாரதம் நடந்தது. பிறகு அவர்கள் கண்ணனோடு சேர்ந்து, அதுவும் பிரிவில்முடிந்தது. கோபிமாருடைய இந்த நிலையை அனுகரிக்கிறாள் ஆண்டாள் இத்திருமொழியில்.

நாமமாயிரமேத்த நின்றநாராயணா நரனே * உன்னை
மாமிதன் மகனாகப்பெற்றால் எமக்குவாதை தவிருமே*
காமன் போதருகாலமென்று பங்குனிநாள்கடைபாரித்தோம்*
தீமைசெய்யும் சிரீதரா எங்கள்சிற்றில் வந்து சிதையேலே. 1

ஆயிரம் திருநாமங்களினால் துதிக்கும்படி நின்ற நாராயணனே! நரனாகவும் அவதரித்தவனே! ஏற்கனவே தீம்பு செய்பவனான உன்னைக் கணவனாகவும் பெற்றால் நாங்கள் நலிவுபடாமல் இருக்கமுடியுமோ! மன்மதன் வரும் காலமென்று பங்குனி மாதத்தில் அவன் வரும் வழியை அலங்கரித்தோம். தீம்புகளைச் செய்யும் ச்ரிய:பதியான கண்ணபிரானே! எங்களுடைய சிற்றிலை நீ சிதைக்க வேண்டா.

உலகில் எல்லோரையும் துன்புறுத்துபவன் தனது மனைவியைப் பொறுக்க முடியாத துன்பத்தில் ஆழ்த்துவான் என்பது சொல்ல வேண்டுமோ? ஏற்கனவே தீம்பனான நீ எங்களுக்குக் கணவனாகவும் வாய்த்தால் எங்களால் துன்பத்தை அனுபவித்து முடிக்க முடியுமோ? இப்போது நாங்கள் இழைக்கின்ற சிற்றில் உன்வரவை எதிர்பார்த்து இழைப்பதல்ல; பங்குனிமாதம் மன்மதன் வருகின்ற காலம் என்பதனால் அவன் வரக்கூடிய வழியை அலங்கரிக்கிறோம் அவ்வளவே. ஸ்ரீதரனே! எங்கள் சிற்றிலை நீ அழிக்க வேண்டாம்.

இன்றுமுற்றுமுதுகுநோவ இருந்திழைத்தவிச்சிற்றிலை*
நன்றுங்கண்ணுறநோக்கி நாங்கொளுமார் வந்திளைத்
தணிகிடாய்*
அன்றுபாலகனாகி ஆலிலைமேல் துயின்றவெம்மாதியாய்*
என்றுமுன்றனக் கெங்கள்மேல் இரக்கமெழாததெம்பாவமே.

இன்று முழுவதும், முதுகு நோகும் படியாக அமர்ந்து உருவாக்கின இச்சிற்றிலை நன்ருக நீ பார்த்து எங்கள் ஆசையைத் தணியச் செய்வாயாக! மஹாப்ரளயம் வந்த அக்காலத்திலே குழந்தை வடிவு கொண்டு ஆலிலையின் மேல் துயின்றவனே! எப்போதும் உனக்கு எங்களிடத்தில் கருணை பிறவாமல் இருப்பது நாங்கள் செய்த பாவத்தின் பலனே!

எல்லாம் வல்லவனை நீ உன் நினைப்பினாலேயே எப்படிப்பட்ட அரியகாரியங்களையும் செய்து முடித்து விடுவாய்! ஆனல் நாங்களோ இன்று முழுவதும் அமர்ந்திருந்து முதுகு நோவ மிகவும் சிரமப்பட்டே இச் சிற்றிலே உருவாக்கியிருக்கின்ருேம். இந்தச் சிற்றிலை நீ நன்ருகக் கடாக்ஷித்து விட்டாயாஞல் எங்களுடைய ஆசை தணிந்துவிடும். ஆனல் அதைச் செய்யாமல் நீ சிற்றிலை அழிக்க முயல்கிருய். பண்டொருகால் பிரளயம் ஏற்பட்ட போது உலகையெல்லாம் உன் வயிற்றில் வைத்துக்காத்து அருள்புரிந்த நீ இப்போது மிகவும் எளியவர்களான எங்களிடத்தில் ஒருநாளும் அருள் புரியாதொழிவது நாங்கள் பண்ணின பாவத்தின் பயனே!

சங்கத்தமிழில் வைணவம்

ஸ்ரீ உ. வே. S. கிருஷ்ண ஸ்வாமி ஐயங்கார்

எரிமலர் சினைஇய கண்ணை; பூவை
விரிமலர் புரையும் மேனியை; மேனித்
திரு ஞெமர்ந்து அமர்ந்த மார்பினை; மார்பில்
தெரிமணி பிறக்கும் பூணினை; மால் வரை
எரி திரிந்தன்ன பொன்புனை உடுக்கையை—
சேவல அம் கொடியோய்! நின் வல வயின் நிறுத்தும்
ஏவல் உழந்தமை கூறும்
நா வல் அந்தணர் அரு மறைப் பொருளே.

முதல் ஐந்து அடிகளிலே திருமாலை விளித்து, அடுத்து வரும் இப்பகுதியால் அவனுடைய திவ்யமங்கள விக்ரஹச் சிறப்பைக் கூறி, இவனே ஸர்வலோக நாயகனென்று கூறி, இவ்வர்த்தத்தில் ப்ரமாணம் அருமறையென்கிறது. குணமில்லை, விக்ரஹமில்லை, விபூதியில்லை என்பாருடைய மிடற்றைப் பிடித்தாற்போலேயிருக்கின்றன இவ்வடிகள்.

(நின் வலவயின் நிறுத்தும சேவல் அம் கொடியோய்) உன்னுடைய வலப்பக்கத்தில் நிறுத்தியிருக்கும் அழகிய கருடக்கொடியை உடையவனே! சேவல்-ஆண் பறவை; (இங்கு) கருடன். கருட த்வஜனென்று ரிஷிகளும் "கருளப் புட்கொடி" [திருவாய் 5-7-3] "கருளக் கொடியொன்றுடையீர்" [பெரியதிரு 10-8-3] என்று ஆழ்வார்களும் கூறிய பரத்வ சின்னத்தைச் சொல்லுகிறது. வேதஸ்வரூபியான பக்ஷிராஜனைக் கொடியாகவும் வாஹனமாகவுமுடையவனே! வேத முதல்வனாயிருக்கமுடியுமென்று கருத்து. இனி, அவனுடைய மற்ற பல அஸாதாரண சின்னங்களைக் கூறி வேதத்தை ப்ரமாணமாக்குகிறது. "அருமறைப்பொருளே கூறும்" என்பதை ஒவ்வொரு வாக்கியத்தோடும் கூட்டிப் பொருள் கொள்ளவேண்டும். (எரிமலர் சினைஇய கண்ணை- அருமறைப் பொருளே கூறும) செந்தாமரை மலரை ஒத்த

கண்களை உடையவனுய் இருக்கின்ருய். இதை வேதம் கூறும். எங்கேயெனில்: "தஸ்ய யதா கப்யாஸம் புண்டரீக மேவமக்ஷிணீ" [சாந்] [அந்தப் பரமபுருஷனுக்கு சூரியனுல் மலர்ந்த தாமரை போன்ற இரு கண்கள் உள] என்ற தன்ருே அருமறை. [விருபாக்ஷரிலும் வேறுபாடு. (பூவை விரிமலர் புரையும் மேனியை-அருமறைப் பொருளே கூறும்) காயாவின் மலர்ந்த புஷ்பத்தை ஒத்த கறுத்த மேனியை உடையவனுகிருய். இதையும் "நீலதோயதமத்யஸ்தா வித்யுல் லேகேவ பாஸ்வரா" [தை-நாரா] [நீல மேகமுட்கொண்ட மின்னற்கொடி போல் விளங்கும்மேனி என்றவிடத்திலே வேதம் விளக்குகிறது. எரியுருவத்தாரிலும் வேறுபாடு. (மேனித் திரு ஞெமர்ந்து அமர்ந்த மார்பினே—அருமறைப் பொருளே கூறும்) அந்த மேனியிலே பெரியபிராட்டியார் விரும்பி வாழும் மார்பை உடையாய், "ஹ்ரீஶ்ச தே லக்ஷ்மீஶ்சபத்ந்யௌ அஹோராத்ரே பார்ஶ்வே" [பு. ஸூ] [ஸ்ரீபூமி தேவிகள் உன் பத்தினிகள்; இரவுபகலாக அருகிலிருக்கின்றனர்] என்றது வேதம் "மத்யஸ்தா வித்யுல்லேகா" [தை-நாரா] என்றவிடத்திலும் இது உணர்த்தப்பட்டது. திருவில்லாத்தேவரிலும் வேறுபாடு. (ஞெமர்ந்து அமர்ந்த) விரும்பி அமர்ந்து தாமரையிலிருப்பும் முள்மேலிருப்பு என்கை. (மார்பில் தெரிமணி பிறக்கும் பூணினே — அருமறைப பொருளே கூறும்) அம்மார்பிலே தெரிந்தெடுத்த மணிகள் பதிக்கபெறற ஆபரணங்களை உடையாய் "ஆப்ரணகாத் ஸர்வ ஏவஸுவர்ண" [சாந்] [நகம் முதல் எல்லாம் பொன்மயம்] முதலான வேதவாக்கியங்கள் இதைச் சொல்லும். கபால பஸ்ம பந்நகாத்யாபரண முடையாரில் வேறுபாடு. (மால்வரை எரி திரிந்து அன்ன பொன்புனை உடுக்கையை— அருமறைப் பொருளே கூறும) நீலமலையொன்றைச் செந்நெருப்புச் சூழ்ந்து கொண்டிருப்பது போன்ற பொன்னுான பீதாம்பரத்தையுடையை. "மாஹாரஜநம் வாஸ:"

[ப்ருஹ] என்று வேதம் இதை உணர்த்திற்று. புவித் தோலை அரைக்கிசைத்தாரிலும வேறுபாடு. (ஏவலுள் பணிந்தமை கூறும் நாவல் அந்தணர் அருமறைப் பொருளே) எல்லாவிலும் உன்னுடைய ஏவலுக்குப் பணிந்து நிற்கின்றமையை நாவன்மையுடைய அந்தணர் ஓதும் அரியமறையாகிற பொருள் கூறும், மறையின் பொருள் அனைவர்க்கும் காட்டும் என்றுமாம். ஏவலுள் பணிந்தது இன்னபொருள் என்று எடுக்காமையாலே எல்லாப் பொருளும் என்றதாகிறது. வேதம எங்கே இப்படிச் சொல்லிற்றெனில்.

''யச்சி கிஞ்சித் ஜகத்யஸ்மிந் த்ருஶ்யதே ஶ்ருயதேऽபி வா |
அந்தர் பஹிஶ்சதத் ஸர்வம் வ்யாப்ய நாராயண: ஸ்தித:'' ।

[தை—நாரா]

[இவ்வுலகில் காண்பனவும் கேட்பனவுமான அனைத்தையும் உள்ளும் புறமும் வியாபித்து விளங்குகிறான் நாராயணன்]

''யஸ்ய ப்ருதிவீ ஶரீரம், யம் ப்ருதிவீ ந வேத
ய:ப்ருதிவீமந்தரோ யமயதி
யஸ்யாத்மா ஶரீரம், யமாத்மா ந வேத
ய ஆத்மாநமந்தரோ யமயதி

[அந்தர்யாமிப்ராஹ்மணம்]

[எவனுக்கு பூமி சரீரமோ, எவனை பூமி அறியவில்லையோ, எவன் பூமியை உள்நுழைந்து நியமிக்கிறானோ, எவனுக்கு ஆத்மா சரீரமோ எவனை ஆத்மா அறியாதோ, எவன் ஆத்மாவை உள் நுழைந்து நியமிக்கிறானோ...]

''ஏஷ ஸர்வபூதாந்தராத்மா அபஹதபாப்மா திவ்யோ தேவ ஏகோ நாராயண:'' [ஸுபால]

[பரமபதத்திலுள்ள நாராயணன் ஒருவனே பாபமற்றவனும், எல்லா பூதங்கட்கும் அந்தர்யாமியாயும் விளங்குமவன்] முதலான பல வேதவாக்கியங்கள் இதை உதகோஷித்தன.

இணை பிரி அணி துணி பிணி மணி எரி புரை
விடர் இடு சுடர் படர் பொலம் புனை வினைமலர்
நெரி கிடர் எரி புரை தன மிகு தன முரண் மிகு
கடறரு மணியொடும் முத்து யாத்த நேரணி
செறி செறி வெறி உறு முரல் விறல் வணங்கு அணங்கு வில்
தார் அணி துணி மணி வெயில் உறழ் எழில் புகழ் அலர்
மார்பின்
எரி வயிர நுதி எரி படை எருத்து மலை இவர் நவையினித்
துணி படல் இல மணி வெயில் உறழ் எழில் நக்கு
இமை இருள் அகல முறு கிறுகு புரி ஒரு புரி நாண்மலர்
மலர் இலகின வளர் பரிதியின் ஒளி மணி மார்பணி
மணம் மிக நாறு உருவின விரை வளி மிகு கடு விசை
உடுவுறு தலை நிரை இதழ் அணி வயிறிரிய அமரரைப்
பொரெழுந்து உடன்று இரைத்து உரைஇய தானவர்
சிரம் உமிழ் புனல் பொழிபு இழிந்து உரம்
உதிர்பு அதிர்பு அலம் தொடா அமர் வென்ற கணை.

உறுப்புக்கள் பெரிதும் சிதைநது காணப்படுதலால், இதன் பொருள் தெளிவாக அறிய இயலவில்லை. பரமபுருஷனுடைய திவ்யாபரணங்களையும், அசுரர்களை அழிக்கும் ஆயுதங்களையும் பேசுகிறதென்பது விளங்குகிறது. முதலிரண்டடிகள் அவன் திருமேனியை அலங்கரிக்கும் மலர்களைப் பேசுகிறது, மலர்' என்பதை ஒவ்வொரு பதத்தோடும் கூட்டினால் ஒவ்வொருவகை மலராகிறது. இணைமலர், பிரிமலர், அணிமலர், துணிமலர், பிணிமலர், மணிமலர், எரிமலர், புரைமலர், விடர்மலர், இடுமலர், சுடர்மலர், படர்மலர், பொலம்மலர், புனைமலர், வினைமலர், என்கை. அடுத்த இரண்டடிகளும் அவனுடைய அணிகளைப் பேசுகின்றன. நெரி அணி, கிடர் அணி, எரி அணி, புரை அணி, தன மிகு அணி, தன முரண் அணி, மிகு கடல் தரும் அணி, முத்து யாத்த நேர் அணி என்பவை ஆபரணங்களாகும். அடுத்த அடி அவனுடைய சார்ங்கமென்னும் வில்லின் பெருமையைப் பேசுகிறது. செறிவில

செறி வில், வெறி வில், உறு வில், முரல் வில், விறல் வில, வணங்கு வில், அணங்கு வில், என்றபடி. அடுத்த அடி திருமார்பின் பெருமையைப் பேசுகிறது. தார்மார்பு, அணி மார்பு, துணி மார்பு. மணி மார்பு. வெயில் உறழ்மார்பு. எழில் மார்பு, புகழ் மார்பு. அலர் மார்பு, என்றபடி. அடுத்துள்ள சில அடிகள் மார்பில் தரித்திருக்கும் வைஜயந்தியென்னும் வனமாலையைப் பேசுகின்றன. அடுத்து வரும் அடிகள் அமரரோடு பொர (யுத்தம் செய்ய) எழுந்து வரும் தானவர் (அசுரர் அரக்கா) களுடைய தலையைக் கொய்து, அமரிலே வெற்றியே கொள்ளும் கணையைப் பேசுகிறது. எவ்வளவு அழகிய வருணனை! ''பிரதியுதவியும் உரையுதவியும் இல்லாமையால். அடிவரையறையும், பொருள்வரையறையும் செய்து இந்த அராகங்கள் நான்கினையும் ஒழுங்குபடுத்த இயலவில்லை, இங்ஙனமே மூலத்திலும் உரையிலும் சிலசில பின்னும் உள'' என்று ஐயரவர்கள் தம் பதிப்பில் குறித்துள்ளனா.

[தொடரும்]

(24-ம் பக்கத் தொடர்ச்சி)

"ப்ரமாண நகநிர்ப்பின்ன வாதிமதேப மஸ்தக:
ப்ராஜதே நிகமாக் கர்ஜந் ஸ்ரீபராசர கேஸரீ"

என்றித்யாதியான ச்லோகங்களையும் பட்டர் திருமுன்பே விண்ணப்பஞ்செய்து அவரநுமதி கொண்டெல்லாருந் தங்களுருக் கெழுந்தருளினார்கள்.

இந்தச்லோகத்திற்கர்த்தமென்னென்னில் :- ப்ரத்யக்ஷ ப்ரமாணம், "அனுமான ப்ரமாணம்வேதாதியான சாஸ்த்ர ப்ரமாணம்இதுகளாகிற நகங்களாலே நன்றாகப் பிளக்கப் பட்ட ப்ரதிவாதிகளாகிற யானைகளுடைய மஸ்தகத்தை யுடையவராய்' வேதாந்தங்களைச் சொல்லிகர்ஜித்து கொண்டு ஸ்ரீபராசரபட்டரென்னுஞ்சிங்கமானது விளங்கு கிறது என்று இன்னபடி ச்லோகங்களுக்கு அர்த்தங்கண்டு கொள்வது

முன்புடையவர் நியமனத்தாலே திக்விஜய யாத்ரை பண்ணி சாரதா பீடத்திற்குப்போய் சாரதாதேவிக்கு ஸ்ரீபாஷ்யத்தைக் காண்பித்து அவளாலே ச்லாகிக்கப் பட்டு அவளநுமதிகொண்டு மீண்டுவருகிறபோது திருவேங்கடமுடையானை சேவித்து வழியில வருகிறபோது, ஓரிடைச்சிக்கு மோக்ஷங்கொடுத்து கோயிலுக்கெழுந்தருளி உடையவரை சேவித்துநிற்க, உடையவருமுகந்தருளி வேதாந்தோதயனசார்யரென்று திருநாமஞ் சாற்றப் பட்டிருக்கிற கிடாம்பியாச்சான், ஒருநாள்பட்டர் ஆளவந்தார் ஸ்தோத்திரத்தி லொருச்லோகத்திற்கு நன்றாகப் பொருள்சாதிக்கக் கேட்டருளி பட்டரிடத்திலே ஆசார்ய ப்ரதிபத்திபண்ணியருளினார்.

அப்போது கிடாம்பியாச்சானுடைய சிஷ்யர்கள் ஏதிப்படி செய்கிறீரென்றுகேட்க, அப்போதுகிடாம்பி யாச்சான் சொன்னவார்த்தை- பிள்ளைகாள் நீரறிந்திலீரே! உடையவரெங்களையெல்லாம் அழைத்தருளி தம்மிடத்திலே இருக்குமாப்போலே நீங்களெல்லாரும் பட்டரிடத்திலிருங்

கோளென்று நியமித்தாராகையால் நானிப்படிசெய்தேனென்றருளிச்செய்தார். பின்பொருநாள் பட்டர் திருநெடுந்தாண்டகத்திலேயொரு பாட்டிற்கு இனிதாகப் பொருளுரைக்கக்கேட்டருளி திருவரங்கப்பெருமாளரையர் முன்பொராசார்யரிடத்திலும் இப்படி பொருள்கேழ்க்கப் பெற்றதில்லை; இப்பொழுது பட்டரிடத்திலே இது கேட்கப் பெற்றோமென்றருளிச்செய்து பட்டரிடத்திலே ஆசார்யப்ரதிபத்திபண்ணியருளினர். பின்பொருநாள் பட்டருடனே அனேகவித்வான்கள் வந்து தர்க்கிக்க, பட்டரும் அவர்களையெல்லாரையும் ஜயித்தருளினர். பின்னையுமவர்கள் பட்டருடைய ஸர்வக்ஞதையைப் பரீக்ஷைபண்ணவேணுமென்று நினைத்து ஒருகுடத்திலேயொருபாம்பை யடக்கிக் கட்டி இக்குடத்திலேயிருக்கிற வஸ்துவென்னென்று கேட்டார்கள். பட்டரும் இதிலேபெருமாளுடைய திருவெண் குடையிருக்கிறதென்ன, அவர்களும் சிரித்து குடத்துக்கட்டை விட்டளவிலே பாம்பு புறப்பட இது குடையோவென்று கேட்டார்கள். பட்டரும், சென்றாற் குடை யாமென்றாழ்வாரருளிச்செய்கையாலே குடையன்றோவென்ன அவர்களும் பட்டர் ஸர்வஜ்ஞரென்று ஆச்சர்யப் பட்டுப்போனார்கள்.

பட்டர் சப்தாதி விஷயங்களிலே அத்யந்தம் விரக்தராயிருக்கிறபடி கண்டு இதை நன்றாக தெரிவிக்கைக்காகச் சிலர் பட்டரமுது செய்கிற போது நெய்யமுதென்று வேப்பெண்ணையைப் பரிமாற, பட்டரும் ஒரு விகாரமின்றிக்கே முகமலர்த்தியோடே அமுதுசெய்தருள, எல்லாரும் அது கண்டு இவர் ஜிதேந்திரியரென்று ஆச்சர்யப்பட்டார்கள்.

பின்பு பட்டர் ஸ்ரீ பாதத்து முதலிகளுடன் பெருங் கூட்டமாக வெழுந்தருளி யிருந்து தர்சநம் நிர்வஹிக்கிற போது ஒரு தீர்த்தவாஸி ப்ராம்மணன் வந்து பட்டரை ஸேவித்து இவர் வேதாந்தப் பொருளுரைக்கிற சாதுர்யத்தையும், கோஷ்டியில் வைபவத்தையுங் கண்டு

பட்டரே! மேல்நாட்டில் வேதாந்தியென்றொரு பெரிய வித்வானிருக்கிறன். அவனுடைய வித்யையுங் கோஷ்டியும் போல உமக்குமிருந்ததென்ன; பட்டரும் அதுகேட்டு அப்படியுமொரு விதவானுண்டோவென்ன உண்டென்று சொல்லி அந்த ப்ராம்மணன் மேல்நாட்டிற்குப் போய் "வேதாந்திகளே உம்முடைய வித்யைக்கும் கோஷ்டிக்கும் மீட்டாயிருப்பாரொருவர் ஸ்ரீரங்கத்திலே பட்டரென்றிருக்கிறரென்ன, வேதாதிகளும் பட்டர்நமக்கீடோவென்ன அவரும் பட்டர் உம்மிலும் எடுப்பாயிருப்பரென்ன வேதாந்திகளும் பட்டருக்கு எந்த சாஸ்த்ரம் வருமென்ன ப்ராம்மணன்சப்ததர்க்கம் முதலானஸகல சாஸ்த்ரங்களும் வருமென்ன, வேதாந்திகளுங் கேட்டு இந்த உலகத்தில் நமக்கொருவருமெதிரில்லையென்று ஆறுசாஸ்த்ரங்களுக்கு மாருஸநமிட்டு அதின்மேலே உன்னதமாக விருந்தோம்; பட்டர் நம்மிலும் அதிகரென்று ப்ராம்மணன் சொன்னானென்று" அன்று துடங்கி வேதாந்தி கிடுக்கிட்டிருந்தான். பின்பந்த ப்ராம்மணன் கோயிலுக்கு வந்து பட்டர் ஸந்நிதியிலே நின்று பட்டரே! உம்முடைய வைபவங்களை யெல்லாம் வேதாந்திகளுக்குச் சொன்னேனென்று சொன்ஞன். பட்டரும் ப்ராம்மணனைக் குறித்து அதற்கு வேதாந்திகள் என்சொன்ஞனென்று கேழ்க்கவேதாந்திகள் பட்டருக்கு எந்த சாஸ்த்ரம் வருமென்று கேட்டான்; பட்டருக்கு சப்ததர்க்க முதலான ஸகலசாஸ்த்ரங்களும் வருமென்று சொன்னேனென்று ப்ராம்மணன் சொல்ல பட்டரும், ப்ராம்மணு! நீ குறையச்சொன்ஞய்; பட்டருக்குத் திருநெடுந்தாண்டகம் வருமென்று வேதாந்திகளுக்குச் சொல்லாதிருந்தாயென்று சொல்லிப்போகவிட, ப்ராம்மணனும் போய் வேதாந்திகளுடனே இச்செய்தியைச் சொன்ஞன். வேதாந்திகளுந் திருநெடுந்தாண்டகமென்கிற சொல்லுக்கே பொருள் தெரிகிறதில்லை; அவரெப்படிப் பட்டவரோவென்று ஆச்சர்யப்பட்டுக் கொண்டிருந்தான்

(தொடரும்)

திருவூரகத்தான் திருவெழுகூற்றிருக்கை

ஊரகத் துறைவோய்! ஒருதனிக் கருணையால்
விழியிரண் டேற்கும் விருந்தொன் றாயினை,
ஒன்றலாப் பிறவியா லிருவினை பெய்யுந்
தாபமூன் றொடுங்கவுன் தளிரடி யிரண்டும்
புகலொன் றாகப் போந்துளை, புணரும்
ஓரிரு ளூழியி லிருவிசும் புயரும்
முந்நீர்ப் பரப்பில் முடங்கிய நாற்றிசை
மூவகை யுலகின் சித்தசித் திரண்டாய்
உதரத் தொன்றிட வொடுக்கினை, ஓரரி
யாகங் கூறிரண் டாகக் குலைத்துச்

T.S. ராஜகோபாலன் B.A., L.T.

சோரியூன் நிணமிவை மூன்றுஞ் சோர்தரப்
பெருக்கினை, நான்கென வண்ணமும் பேணினை.
ஐம்பெரும் பூதமும் நால்வகை யுகமும்

1. ஒரு தனி-ஒப்பில்லாத. 2. விருந்து-கண்ணால் பருகிக் களிக்க. 3. இருவினை-புண்ணிய பாபங்கள். 4. தாபம்-துன்பம். 5-9. பிரளய காலத்தில் உலகைக் காத்த வகை. புணரும்-பொருந்திய. இரு விசும்பு உயரும்-ஆகாயம்வரை ஓங்கிய. முந்நீர்-கடல், முடங்கிய-சுருங்கிய, நாற்றிசை-நாலாம் திசைகள், மூவகை உலகு-ஆகாயம், பூமி, பாதாளம். சித்து ஆத்மாக்கள், அசித்து-சடப்பொருள்கள். உதரம்-வயிறு 8-12; நரசிங்காவதாரம், ஓர் அரி-இரணியன்,

மூன்ருங் காலமு மிரவுபக லிரண்டாய்
உலகிதற் கொருமுத லாக வொளிர்ந்தனே.
ஒருகாலிருபிறப் பாளன் மகனுய்
முப்பிரி நூலணிந் தாரணம் நான்குங்
கற்றனே, ஐம்புலன் கடிந்த படிவனின்
சேயா யவன்றனேச் சேண்பா லறுமீன்
கணத்தினுள் நிறுத்தினே, காசினி வேந்தரின்
குருதி பெருக்கிக் குட்டமைந் தாக்கினே.
நால்வகை வியூக மூர்த்தியாய் முத்தொழில்
இயக்க இருவர் தம்மொடு மொன்றினே
எய்கணே யொன்ரு லிருவ ரரக்கரை
காய்ந்து வேள்வியில் முத்தீ காத்தனே,

குலேத்து-அழித்து, சோரி-இரத்தம், ஊன்-மாமிசம். நிணம்' கொழுப்பு. 12-15; உலகமயம், நான்கென வண்ணம்; பால், பொன், பசுமை, கார், பேணினே-விரும்பினுய்.பூதம்-நிலம், நீர், தீ, விசும்பு, காற்று. யுகம்-கிருத, திரேத, துவாபர கலியுகங்கள், மூன்ரும் காலம்-இறப்பு, நிகழ்வு, வருவது. ஒளிர்ந்தனே-விளங்குகிருய. 16-18; வாமன அவதாரம், இரு பிறப்பாளன்- அந்தணன், முனிவன்,முப்புரிநூல்-பூணூல், ஆரணம்-வேதம். 18-2' பரசுராம அவதாரம், ஐம்புலன்-ஐந்து இந்திரியங்கள்.ப டிவன்-முனிவன்; பார்க்கவன் சேய்-மகன், சேண்-ஆகாசம்.மீன்-நக்ஷத்திரம்,காசினி-பூமிகுருதி-உதிரம். குட்டம் ஐந்து-ச்யமந்த பஞ்சகம், 22, 23, வியூக மூர்த்திகள் வச்சுதேவன் ப்ரத்யும்நன், ஸங்கர்ஷணன்' அநிருத்தன், முத்தொழிலில். படைத்தல், காத்தல், அழித்தல், இருவர்; பிரமன், சிவன் 24-28இராமாவதாரம். கணே-அம்பு. இருவர் : சுபாகு, மாரீசன். நாற்பால் நிலம்

நாற்பால் நிலந்தான் நல்கிய தங்கை
ஐம்பா லோதியை யணைத்தற் காவதோர்
ஆறெனச் சடையோன் வில்லை யகைத்தனை;
எழுநா அறுமுக னைங்கரன் தம்மொடு
நாலுஞ் சடையின் முப்புர வைரி
ஏங்கி முதுகிட இருகால் வில்லினிற்
புங்கமே யொன்று பொருத்தி யெய்தனை;
தெவ்வுடை யொருவனின் சிறையினி லிருவர்
வணங்க மும்மை யறியா வளமொடும்
நாற்கர மைம்படைச் சோதி யடர்த்தனை,
ஆறுகடந் தாயர் பாடியில் வளர்ந்தனை,
ஏழ்விடை செற்றனை, அறுகால் முரலுங்
கோதை ஐயிடைக் கம்பரங் குவித்தனை,
நாற்படை நடுவினில் நலனென முப்பொருள்
அர்ச்சுனற் கருளினை, இம்மை மறுமை

நாலுவகைப் பட்ட நிலம். நிலமாகிய பூமிதேவி நங்கை சீதை. (உழுபடைச் சாலில் தோன்றியவள்), ஓதி கூந்தல். ஐம்பால்—ஐவகைப் பண்புகள் வாய்ந்த. ஆறு-உபாயம். சடையோன் - சிவன், அகைத்தனை-முறித்தாய். 26-82: வாணனுடன் போ. எழு நா அக்நி, அறுமுகன்-முருகக் கடவுள், ஐங்கரன்-விநாயக் கடவுள். நாலும்-தொங்குகின்ற. முப்புரவைரி-முப்புரங்களை எரித்த சிவன். இருகால்—இரண்டு நுனிகளையுடைய. புங்கம்-அம்பு 33-38: கிருஷ்ணவதாரம். தெவ்-பகை. ஒருவன். கஞ்சன் இருவர். தாய் தந்தையார். மும்மை-முக்காலம். மும்மை அறியா-எப்போதும் விளங்குகிற. ஐம்படைச் சோதி-சங்கு சக்கரம், கதை, வில், வாள் இவற்ருல் பெருமை. ஆறு-

இரண்டிலு மூன்ற னருளே சாற்றினை
புகலொன் ருகப் பூமகள் கேள்வனே!
பாரினுக் கணியாம் பதியிது தன்னில்
காரடர் பொழிலிற் களிவண் டறைய
விரிமலர் தம்மின் வேரி கவர்ந்து
பரவிடு மென்கால் பரவ மறுகெலாம்
பொங்கரில் நின்புகழ் புள்ளெலாம் நிரப்ப
எங்கும் பெருகுமா லின்பமாம் வெள்ளம்
நின்னரு ளொன்றே நிகரிலாச் செல்வமாய்
மன்னும் நாற்கலை வல்லோர் நாடுவர்
நின்னடி யடியேன் நினைத்துய நாளும்
இன்னருள் வொழிவா யென்றனக் கிறையே!

யமுனை. விடை-ரிஷபம்: அறுகால்-வண்டு. ஐயிடை-ஒடுங்கிய இடை வாய்ந்த திரௌபதி. அம்பரம்-உடை 39-41. இவளைக் காரணமாகக் கொண்ட போர். நாற்படை-நாலுவகை யான சேனை. முப்பொருள்-கருமம், ஞானம், பக்தி. அருளே சாற்றினை- அருளே உபயமாக விளக்கினாய். புகல்-அடைக்கலம் பூமகள்-லக்ஷ்மி 43-52 தலத்தின் ஏற்றம். கார்-மேகம் அறைய-இசைபாட. விரிமலர்-மலர்கின்ற பூக்கள், வேரி-பரிமளம். மென் கால்-தென்றல் இளங்காற்று மறுகு-வீதி, பொங்கர்-பொழில். புள்-பறவை. நாடுவர்-விரும்புவர்.

அண்ணஸ்வாமியின் அமுதமொழிகள்

ஸ்ரீவைஷ்ணவ சம்ப்ரதாயத்தில் நம்மாழ்வார் அருளிச் செய்த திருவாய்மொழி ஆயிரத்திற்குள்ள ஒப்புயர்வற்ற



பெருமை உலகமறிந்தது. அது நூறு பதிகங்கள் கொண்டது. ஒவ்வொரு பதிகத்திலும் ஆழ்வாருடைய அனுபவம் எத்தகைத்து என்பதைத் தெரிந்துகொள்ள மணவாளமாமுனிகள் அருளிச்செய்த திருவாய்மொழி நூற்றந்தாதி என்ற பிரபந்தம் அவதரித்துள்ளது. ஆனால் அது வெண்பாவாக இருப்பதாலும், மிகச் சுருக்கமாக இருப்பதனாலும் ஒவ்வொரு பதிகத்தின் தாத்பர்யத்தை விளக்கமாகத் தெரிந்து கொள்வதற்கு **ஸ்ரீ உ வே. மஹாவித்வான் ப்ரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசாரியர் ஸ்வாமி** இயற்றிய திருவாய்மொழி திவ்யார்த்த தீபிகையில் ஒவ்வொரு பதிகத்திற்கும் முன்னுரையாகவுள்ள "அவதாரிகை" என்கிற பகுதி மிக இனியதும் மிக எளியதும் ஆதலால் அந்த அவதாரிகைகள் இங்கே கொடுக்கப்படுகின்றன.

முதற்பத்தில் முதற்பதிகம் — உயர்வறவுயர்நலம்

இதில், மஹோபகாரங்களைத் தமக்குச் செய்தருளின எம்பெருமானுடைய திருவடிகளைத் தொழுது மேன்மை பெறும்படியாக ஆழ்வார் தமது திருவுள்ளத்திற்கு உபதேசிக்கிறார்.

புறமதத்தவருடைய கொள்கைப்படி எம்பெருமான் நிர்க்குணனல்லன், ஸமஸ்த கல்யாண குணாத்மகன் என்கிற வேதாந்த ஸித்தாந்தத்தை முதலடியிலே வெளியிட்டருளுகிறார். இதனால், எம்பெருமான் தனது திருக்கல்யாண குணங்களைக் காட்டி இவ்வாழ்வாரை ஈடுபடுத்திக் கொண்டமை விளங்கும்.

குணங்களுக்குத் தோற்று அடிமைப்படுதல் என்றும் ஸ்வரூபமாகவே அடிமைப்பட்டிருத்தல் என்றும் இருவகைப்பட்டுள்ளதான அடிமையில் குணப்ரயுக்தமான அடிமையிற்காட்டிலும் ஸ்வரூபப்ரயுக்தமான அடிமையே சிறக்குமெனபது ஸம்ப்ரதாய ஸாரார்த்தமாயினும், ஆழ்வார் தம்மை எம்பெருமான் அகப்படுத்திக் கொண்டது திருக்குணங்களைக் கொண்டாதலால் தாம் இந்த துறையை முதலிலே பேசுகிறாரென்க. ஸ்வரூப ப்ரயுக்தமான அடிமையும் ஆழ்வார்க்குக் குறைவற்றதென்னுமிடம் ''ஆகிலுங் கொடியவென்னெஞ்சமவனென்றே கிடக்கு மெல்லே'' என்ற பாசுரத்தால் வெளியிடப்படுகின்றமை காண்க. மற்றும் எம்பெருமானுடைய பரத்துவத்துக்கேற்ற பல தன்மைகளையும், சரிதைகளையும் அருளிச்செய்து தலைக்கட்டுகிறார் இப்பதிகத்தை. ஆகவே இப்பதிகம் எம்பெருமானுடைய பரத்துவத்தை வெளியிடுவதாகும்.

முதற்பத்தில் இரண்டாம் பதிகம்—வீடுமின் முற்றவும்

ஆழ்வார் தாம் அநுபவிக்கும் பகவத்விஷயம் தனியே அநுபவிக்கக்கூடிய தல்லாமையாலே *மச்சித்தா மத்கத ப்ராணா: போதயந்த: பரஸ்பரம்* என்று கீதாசார்யன் பணித்தபடியே பிறரோடு உசாவியே போதுபோக்கித் திரிக்க வேண்டியவரான தாம் அப்படிப்பட்ட அதிகாரிகளைப் பெறுதற்காக நாற்புறமும் கண்வைத்துப் பார்த்தார்; எல்லாரும் ஸம்ஸாரிகளாயிருந்தனர்; தாம்

பகவத் விஷயத்திலே ஊன்றியிருக்கிறுப்போலே அவர்கள் விஷயாந்தரங்களிலே ஊன்றியிருக்கக் கண்டார் ஆழ்வார். அன்னவர்களுடைய அநர்த்தத்தைத் தவிர்க்காமல் நிற்க மாட்டிற்றிலர். அவர்களை எப்படி மீட்கலாமென்று பார்த்தார். "இவர்களோ சேதநராயிருந்தார்கள்; விஷயாந்தரங்களிலே வாசியறிந்து தீயவற்றைக் கழித்து நல்லவற்றைக் கைக்கொள்பவராயிரா நின்ருர்கள்; காய்கறி முதலானவற்றிலும் நன்மை தீமைகளை ஆராய்ந்து நல்லவற்றைப் பரிக்ரஹிக்கவும் தீயவற்றைப் பரிஹரிக்கவும் வல்லவரான இவர்கள் இன்னமும் சிறிது ஆராய்ச்சியைச் செலுத்தமாட்டாதே யிராநின்ருர்கள்; பகவத் விஷயத்தின் நன்மையையும் விஷயாந்தரங்களின் தீமையையும் நாம் எடுத்துக் காட்டினுல் உண்மையை ஆராய்ந்து பார்த்து ஹேயவிஷயங்களை விட்டு உபாதேய விஷயத்தைப் பற்றக் கூடுமே; ஆதலால் அதை உபதேசித்துப் பார்ப்போம்" என்று திருவுள்ளம் பற்றி, எம்பெருமானுடைய நன்மையையும், ஸம்ஸாரிகள் பற்றிக் கிடக்கிற விஷயாந்தரங்களின் அற்பத்தன்மை, அநித்யத் தன்மை முதலியவற்றையும் அருளிச் செய்யாநின்று கொண்டு விஷயாந்தரங்களில் நசையற்று பகவத் பக்தியைப் பண்ணுங்கோளென்று உபதேசிக்க இழிகிருர்.

முதற்பத்தில் மூன்ரும் பதிகம்—பத்துடையடியவர்

முதற்றிருவாய் மொழியில் எம்பெருமானுடைய பரத்துவத்தைப் பேசினுர். அங்ஙனம் பரனை அப்பெருமானைப் பஜியுங்கோளென்று இரண்டாந் திருவாய்மொழியில் உபதேசரூபமாக அருளிச்செய்தார். அங்ஙனம் உபதேசித்த ஆழ்வாரை நோக்கி ஸம்ஸாரிகள் "ஸ்வாமிந்! பஜியுங்கோள், பஜியுங்கோள் என்று பலகாலும் அருளிச் செய்கின்றீர்; இருகை முடவனை நோக்கி 'ஆனையேறு, ஆனையேறு' என்ருல் அவனுல் ஏறப்போமோ? அப்படியே,

ஸர்வேச்வரனாய் ''நாகணை மிசை நம்பரர் செல்வர் பெரியர்'' என்னும்படி மிகப்பெரியனாயிருக்கின்ற அவனை நீசரான ஸம்ஸாரிகளாலே பற்றப் போமோ?'' என்ன, அவ்வானை தானே அவ்விருகை முடவனுக்கும் ஏறலாம்படி படிந்து கொடுக்குங்கால் ஏறத் தட்டில்லையன்றே; அப்படியே ஸம்ஸாரிகளுக்குப் பஜிக்கலாம்படி அவன் தன்னைத் தாழவிட்டு எளியனுமாகில் பஜிக்கத் தட்டில்லையே,''யென்கிறார். எம்பெருமானுடைய பரத்வத்தை எவ்வளவும் பேசலாம்; எளிமையைப் பேசுவதென்பது அரிது; அப்படிப்பட்ட பெரியவன் இப்படித் தாழநின்றானே!' என்று 'உள்ளெலாமுருகிக் குரல் தழுத்தொழிந்து உடம்பெலாங் கண்ணநீர் சோரப் பேச வேண்டிய விஷயமாகையாலே தெளிந்திருந்து பேசப் போகாதே! ஆழ்வாரை ஆறுமாதம் மோஹிக்கப்பண்ணின விஷயமாயிற்று இது.

முதற்பத்தில் நான்காம் பதிகம்—அஞ்சிறைய

எம்பெருமானை அநுபவித்தல் பலவகைப்பட்டிருக்கும்; அவனுடைய திருநாமங்களைச் சொல்லியநுபவித்தல், திருக்கல்யாண குணங்களைச் சொல்லியநுபவித்தல், வடிவழகை வருணித்து அநுபவித்தல், அவனுகந்தருளின திவ்யதேசங்களின் வளங்களைப் பேசியநுபவித்தல், அங்கே அபிமானமுள்ள ஸ்ரீவைஷ்ணவர்களின் பெருமையைப் பேசியநுபவித்தல்,—என்றிப்படி பலவகைப்பட்டிருக்கும் பகவதநுபவம். இவ்வகைகளில் பரம விலக்ஷணமான மற்றொரு வகையுமுண்டு; அதாவது—ஆழ்வார் தாமான தன்மையைவிட்டுப் பிராட்டிமாருடைய தன்மையை ஏறிட்டுக்கொண்டு வேற்றுவாயாலே பேசியநுபவித்தல். இப்படி அநுபவிக்குந்திறத்தில், தாய்பாசுரம், தோழி பாசுரம், மகள் பாசுரம என்று மூன்று வகுப்புகளுண்டு. அப்போது ஆழ்வாருக்குப் 'பராங்குசர்' என்ற ஆண்மைப்

பெயர் நீங்கி 'பராங்குசநாயகி' என்று பெண்மைப் பெயர் வழங்கப்பட்டுவரும். தாய்சொல்வது போலவும், தலைமகள் சொல்வதுபோலவும், தோழி சொல்வதுபோலவும் பாசுரங்கள் வெளிவந்தாலும் பாசுரம் பேசுகிறவர் ஆழ்வாரேயாவர். ஒரு ஆறுனது பல வாய்க்கால்களாகப் பெருகினாலும் அவற்றுக்குப் பிரதானமான பெயர் ஒன்றேயாயிருக்குமாபோலே, இம்மூன்று நிலைமைகளாகச் சொல்மாலை வழிந்து புறப்பட்டாலும் "அமர்பொழில் வளங் குருகூர்ச்சடகோபன் குற்றேவல்கள்" என்று ஆழ்வார் பாசுரமாகவே தலைக்கட்டும்.

ஆழ்வார் தாமான தன்மையை விட்டிட்டு ஸ்த்ரீ பாவனையை ஏறிட்டுக் கொள்ளுதல் ஏதுக்காகவென்னில்; ஆழ்வார் தாமாக ஏறிட்டுக் கொள்ளுகிறாரல்லர்; அந்த அவஸ்தை தானே பரவசமாக வந்துசேருகின்றது. புருஷோத்தமனாகிய எம்பெருமானது பேராண்மைக்குப் மூன் உலகமடங்கப் பெண்தன்மையதாயிருக்கையாலும், ஜீவாத்மாவுக்கு ஸ்வாதந்திரிய நாற்றமேயின்றிப் பாரதந்திரியமே வடிவாயிருக்கையாலும் இவ்வகைகளுக் கேற்ப ஸத்ரீ பாவனை வந்தேறியன்று என்றே கொள்ளலாம்.

நாயகி பாசுரமாகச் செல்லுகிற இத்திருவாய்மொழியில் சில பறவைகள் தூது விடப்படுகின்றன. அப்பறவைகள் ஞானமும் அனுட்டானமும் நிரம்பிய ஆசாரியர்கள் என்பதை வியாக்கியானங்களில் விளங்கக் காண்க.

(தொடரும்)

(8-ம் பக்கத் தொடர்ச்சி)
மவை. தமது வர்ணத்துக்குத் (பிராமணன் முதலான நிலைக்குத்) தக்கபடி முதல் முக்குலத்தவர் நித்ய நைமித்திக ரூபமான கர்மானுஷ்டானம் பண்ணவேணும். ஸந்த்யா வந்தனம் முதலானவை நித்யகர்மங்கள். விசேஷதினங் களில் பண்ணும் (பித்ருதர்பணாதிகள்) நைமித்திககர்மங் கள். இவைகளை பகவதாஜ்ஞை; பகவத்கைங்கர்யமாகச் செய்கிறேன், என்று பலத்தில் கண்வையாமல் ஸித்தோ பாயவரணம் (எம்பெருமானையே உபாயமாகப்பற்றுதல்) பண்ணியிருந்தால் ''குலந்தரும்'' என்கிறபடியே யாவரும் ப்ரபந்நகுலம் தொண்டக்குலம் என்று போற்றத்தக்கவ ராகிறார்கள் இவர்களிடம் பிறப்பைப் பற்றிய ஏற்றத் தாழ்வு பாராமல் வைஷ்ணவத்தையிட்டு கௌரவபுத்தி நடக்கவேணும்.

இருக்கும் நாள் பகவத்பாகவத்ய கைங்கர்யங்களில் போது போக்கவேணும் அவர்கள் பக்கல் கேடு நினையாதே ''பல்லாண்டு'' என்று மனதால் மங்களாசாஸனமும், அவர்கள் விஷயத்தில் பிறரும் உபகரித்து உய்யும்படி நல் வார்த்தையும், அவர்கள் குணகீர்த்தனமான வாசிக கைங்கர்யமும், அவர்களை தண்டம் ஸமர்ப்பிப்பது, உபசரிப்பதான காயிக (உடலால்) கைங்கர்யமும் நெடுகிச் செல்லவேணும். இவை வஞ்சனையில்லாமல் முடிந்த வரை நடத்தவேணும்.

இனி ஸ்வரூபமிருக்கும்படியை உணர்ந்து நடக்கும்படி; **ஈச்வரன் சேஷி**-எல்லா சேதன அசேதன வஸ்துக்களையும் தன்னிஷ்டப்படி பயன் கொள்ளும் ஸ்வாமி; **நியந்தா**-சேதனரின் எல்லா செயல்களும் தனததீனமாகக் கொண் டவன் (நியமிப்பவன்); **ஸ்வாமி** - இவைகளைப் படைத்த ஸ்வாமி; **சரீரி** - ''யஸ்ய ஆத்மா சரீரம்'' — என்கிற ச்ருதிப்படி எல்லா சேதன அசேதனங்களையும் சரீர

உடையவன் (அவற்றுள் உயிராயிருப்பவன்); **வ்யாபகன்;** விஷ்ணு சப்தத்தாலே சொல்லுகிறபடி எல்லா வஸ்துக்களிலும் உள்ளும் புறமுமாகப் பரந்திருப்பவன்; **தாரகன்** ஸமஸ்த சேதநாசேதனங்களையும் தாங்கி நிற்பவன்; இவை உள என்பது அவன் தாரகனாயுள்ளமையால்தான்- **ரக்ஷகன்**-வேண்டியதை நிறைவேற்றுவது, வேண்டாததை விலக்குவது, முதலியன செய்து காப்பவன்; **போக்தா** - தங்களை (சேதனர்களை) அநுபவிப்பான்; "அஹமந்நம்" என்கிறபடி இவர்களை அந்நமாகவும் அவனை "அந்நாத." என்று உண்பவனாகவும் ச்ருதி ஓதிற்று. "ஜ்ஞாநியை விக்ரஹத்தோடே ஆதரிக்கும்" என்று உலகாரியனே ஸாதித்தபடி. இது லீலாவிபூதியாகையாலே லீலாரஸ அநுபவம் அவனதாயிருக்கிறது **ஸர்வஜ்ஞன்** - எல்லாமறிபவ்ன்; **ஸர்வசக்தி** - எல்லாம வல்லவன்; யாராலும் செய்ய இய்லாததையும் செய்யவல்ல அகடிதகடநா ஸமர்த்தன்; **ஸர்வஸம்பூர்ணன்**-எல்லா விதங்களிலும் குறைவற்றவன்; **அவாப்தஸமஸ்தாகமன்**- தனக்கென்று நிறைவேறாத விருப்பம் ஒன்றுமில்லாதபடி நிறைவுற்றவன். இப்படி ஸர்வேச்வரனுடைய **ஆகாரத்தை** ஸ்வரூபத்தை இயல்பை அறியவேணும்.

(தொடரும்)

"அருளிச் செயல் ஏற்றம்"

ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாயத்தில் குறிப்பாக தென்னாசார்ய ஸத் ஸம்ப்ரதாயத்தில் ஆழ்வார்களின் அமுத மொழியாம் நாலாயிர திவ்யப் பிரபந்தத்திற்கு ஏற்பட்டுள்ள அசாதாரணமான ஏற்றம் வேறு எந்த கிரந்தத்திற்கும் ஏற்படவில்லை.

ஸ்ரீவைஷ்ணவ திவ்ய தேசங்களிலும் இதர ஸ்ரீவைஷ்ணவ ஸன்னிதிகளிலும் மடங்களிலும் நமது திருமாளிகைகளிலும் நித்யப்படி திருவாரதனத்தில் திருப்பாவை மற்றும் திவ்யப்பிரந்த ஸேவாகாலம் சாற்றுமறை இல்லாமல் திருவாராதன கிரமம் முடிவடைவதில்லை அதாவது திவ்யப்பிரபந்த பாராயணம் என்பது நமது நித்யப்படி திருவாராதனக் கிரமத்தில் மாபெரும் அங்கமாக ஆக்கப்பட்டுள்ளது.

T. A. பாஷ்யம்

ஆழ்வார்களின் செஞ்சொற்கவிகளாம் நாலாயிர திவ்யப் பிரபந்தமூல பாடத்தினை சிறுவர்களுக்கு சிறுவயது முதலே ''சந்தை'' சொல்லிப் பின்திருவை சொல்லுதல் எனும் முறையில் நெட்டுருவு செய்யச் சொல்லி பின் ஸன்னிதிகளில் மனப்பாடமாக கோஷ்டியாக இயலாக ஸேவிக்க ருசியை ஏற்படுத்தி அநந்ய ப்ரயோஜனமாக எம்பெருமானுக்குப் பல்லாண்டு பாடுவதே ஸ்வயம் ப்ரயோஜனமாக அருளிச்செயல் ஓதும்பழக்கத்தை ஏற்படுத்தி இச்சுவை தவிர யான் போய் இந்திரலோகம் ஆளும் அச்சுவை பெறினும் வேண்டேன் என்று இந்த அத்யாக கைங்கர்யத்திற்கும் மேற்பட கைங்கர்யம் இல்லை என்று அறுதியிட்டுள்ளனர் பெரியோர்.

இந்த திவ்யப்ரபந்தின் ஏற்றம் கருதித்தான் ஸன்னிதிகளிலும் மடங்களிலும் திருமாளிகைகளிலும் திருவாராதனத்தில் மந்த்ரபுஷ்பத்தில் இயற்பாவில் ஒரு பாசுரம்இரட்டித்துஇயலாக மூல அனுஸந்தானம் மட்

செய்யும் முறை அனுதியாக ஏற்பட்டு இன்றளவும் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது.

ஆழ்வார்களின் அருளிச் செயல் திருச்செவி சாற்றி அருளும் பொருட்டே ஸகலதிவ்ய தேசங்களிலும் திருவத்யயன உத்ஸவம் மிகமிகக் கோலாகலமாகசீரும் சிறப்புமாக நடந்து வருகின்றது (கோயில் முதலிய 3 திவ்ய தேசங்களில் மட்டுமே அரையர் ஸேவையாக நடைபெறுகின்றது). கோயில் திருமலை பெருமாள் கோயில் திருநாராயணபுரம் போன்ற திவ்ய தேசங்களில் பிரம்மோத்ஸவ மற்றும் முக்கிய உத்ஸவாதிகளில் அருளிச் செயல் ஸேவித்து ஸத்தை பெற வேண்டும் என்பதற்காகவே பொருள் சேர்க்கும் எண்ணம் இன்றி தமது பொருளையும் செலவு செய்து அனன்யப் ப்ரயோஜனமான கைங்கர்யம் செய்ய வாசிக கைங்கர்யத்தில் ருசியுடையோர் திவ்ய தேசங்களில் கூடுகின்றனர்.

கவிச்சக்ரவர்த்தியாம் கம்பர் தமது சடகோபரந்தாதியில

''அந்தமிலா மறையாயிரத்தாழ்ந்தவரும்பொருளைச்
செந்தமிழாகத் திருத்திலனேல் நிலத் தேவர்களும்
தந்தம் விழாவு மழகு மென்னும்'' என்கிறார்

ஆழ்வார் அருளிச் செயல் இல்லாவிடின் ஸ்ரீவைஷ்ணவர்களின் கதியும் ஆலயங்களின் விழாக்களின் அழகும் என்னாகும் என அவர் வினவியுள்ளமையும் ஈண்டு கண்டுணரத்தக்கது.

பூதம் பேய்...கோதை குலமுனிவன் கூறிய நூலோதி வீதி வாழி என வருந்திரளை வாழ்த்துவார் தம் மலரடி சென்னிக்கு மலர்ந்த பூவே என்று திவ்யப்பிரபந்தம் ஓதுபவர்களுடைய திருவடிகளைத் தலைமேல் கொள்ள வேணும் என்றிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

நாலாயிர திவ்ய பிரபந்த மூலத்தினை தமிழ்தெரிந்த தமிழ் நாட்டில் மட்டுமேயன்றி ஆந்திரம் கர்னாடகம் நேபாளம் பத்ரீ காசி போன்ற இடங்களில் அந்தந்த மொழிகளில் லிபிகளில் புத்தகமாக ஆக்கி அந்தந்த ஸ்ரீவைஷ்ணவ ஸன்னிதிகளில் ஸேவித்து வருவதையும் நாம் அறிவோம். பொருள் புரியாவிட்டாலும் ஆழ்வார் களின் அருளிச் செயலை அப்படியே ஸேவிக்க வேண்டும் என்பதற்காகவே அவர்கள் அப்படி சேவிக்கிறார்கள்.

இனி ஸன்னிதிகளை விட்டு நமது க்ருஹங்களின் விஷயத்திற்கு வருவோம். கல்யாணங்களில் வாரணமாயிரம் பதிகம் ஸேவிப்பது அனைவரும் அறிந்தவொன்று திருநாராயணபுரம் ஸ்ரீவைஷ்ணவர்கள் கல்யாணத்தில் கூட நாந்தியின் போது கோயில் திருவாய்மொழி, இராமாநுச நூற்றந்தாதி ஸேவாகாலம் நடத்தி, ஸ்ரீபாத தீர்த்தம் சேர்த்து கல்யாணப் பிள்ளைக்குக் கொடுப்பது இன்றும் வழக்கத்திலுள்ளது. உபநயன, சீமந்தமுகூர்த்தங் களுக்கு முதல்நாள் ததியாராதனம் என்று தனியாக நடத்துவதும் அன்று ஸேவை சாற்றுமறை ஸ்ரீபாத தீர்த்தம் சேர்ப்பதும் யாவருமறிந்த வொன்று. அதே போல் ஷஷ்டியப்த்த பூர்த்தி சதாபிஷேகம் முதலியனவும் இப்படியே நாலாயிர திவ்யப்பிரபந்த ஸோவாகாலம் நடத்தும் விழாவாகவே கொண்டாடப் படுகிறது. யாராவது ஒருவர் பரமபதித்து விட்டால் சரம திருமேனிக்கு ஸ்ரீசூர்ண பரிபாலனம் செய்வதற்கு அத்யா பகர்களை வரவழைத்து ஸேவை நடத்தி அவர்களுடைய பிரசாதமாகவே திருமண் ஸ்ரீசூர்ணம் முதலியவை சரம திருமேனிக்குஅணிவிக்கப்படுகிறது. திருவத்யயனகோஷ்டி களும் பிறகு விபவமாக நடத்தப் படுகின்றன. ஒருவர் பரமபதித்து விட்டால், அவருடைய ஆத்ம சாந்திக்காக ஒருவருடத்திற்குள் கண்டிப்பாகநாலாயிர திவ்யப்பிரபந்

ஸேவாகாலம் பெரிய விழாவாக நடத்த வேண்டும் என்ற வழக்கம் இன்றும் திருநாராயணபுரம் ஸ்ரீவைஷ்ணவர் களிடையே உள்ளது. இப்படி திவ்யப்பிரபந்தப் பாசுர அனுஸந்தானம் ஸ்ரீவைஷ்ணவர்களுடைய வாழ்க்கையில் ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் பின்னிப் பிணைந்துள்ளதுபோல் வேறு எங்கும் காணமுடியாது.

முடிவாக ஒரு விஷயம். நமது ஸம்ப்ரதாயத்தில் எத்தனை க்ரந்தங்களை வாசித்தாலும், எத்தனைகாலக்ஷேபங் களைக் கேட்டாலும், முடிவாகத் தெரிந்து கொள்ள வேண்டிய விஷயம், ஒவ்வொருவரும் எம்பெருமானுக்குப் பல்லாண்டு பாடுகையாகிற கைங்கர்யத்தைச் செய்ய வேண்டும் என்பது தானே! அந்தக் கைங்கர்யம் செய்யும் எண்ணம், ஒருவன் திவ்யப்பிரபந்த கோஷ்டியில் அன்வயிக்கும் போதே ஏற்பட்டு விடுகிறது. எனவேதான் ஸ்ரீவைஷ்ணவ ஸப்ப்ரதாயத்தில் இக் கைங்கர்யம் மிகமிக உயர்ந்ததாகக் கொண்டாடப் படுகிறது.

''முற்பட த்வயத்தைக்கேட்டு இதிஹாஸபுராணங் களையுமதிகரித்து, பரபக்ஷப்ரதிக்ஷேபத்துக் குடலாக ந்யாய மீமாம்ஸைகளையுமதிகரித்து **போதுபோக்கும் அருளிச் செயலிலேயாம் நம்பிள்ளையைப்போலே**'' எழுந்தருளியிருந்த ஸ்ரீ.உ.வே மஹாவித்வான் ப்ரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசாரியர் ஸ்வாமி வேத, இதிஹாஸ புராண ஸ்ரீபாஷ்ய பகவத் விஷய. ரஹஸ்யாதி க்ரந்தங்கள் அனைத்தையும் நன்குகற்று, அவற்றில் பற்பல ஆராய்ச்சி களும் செய்து உலகோரனைவராலும் கொண்டாடப் பட்ட பெருமையுடையவராக எழுந்தளியிருந்த போதும், அவர் பெரும்பேறாகக் கருதியிருந்தது தேவப்பெருமானு டைய அத்யாபக கோஷ்டியில் அந்வயிக்கும் பேற்றையே! இந்த கோஷ்டியில் அன்வயிப்பதற்காகவே எத்தனையோ [illegible]றைகள் பெரிய பெரிய உபந்யாசங்கள் செய்யும் விஷ[illegible]

வாய்ப்பையும் தவிர்த்திருக்கிறார் வேத வேதாந்த வைஜயந்தீ பாடசாலை ஒன்றமைத்து அதில் அத்யாபக, வேதபாராயண கைங்கர்யங்களுக்கு வேண்டியவற்றைக் கற்பித்துப் பலரை உருவாக்குவதற்காக லக்ஷக்கணக்கில் செலவு செய்துள்ள அவர், உபந்யாசகர்களை உருவாக்குவதில் கூட இந்த அளவுக்கு ஈடுபாடு கொள்ளவில்லை என்பது மறுக்க முடியாத உண்மை.

இப்படிப் பண்டிதர் பாமரர் வித்யாசம் இல்லாமல் ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாயத்தில் அனைவருமே அத்யாபக கைங்கர்யத்தை மிக உயர்வாகக் கொண்டிருக்க, ஒரு சிலர் அதை இகழ்வதும், ஸ்ரீவைஷ்ணவ அத்யாபக கோஷ்டியில் வெறும் பிறப்பு வேஷம் இவற்றை வைத்துக் கொண்டே இடம் பெற்று விடுகின்றார்கள் என்று கூறுவதும் வருந்தக்கது. தத்தம் இல்லங்களிலே நடைபெறும் ஷஷ்டியத்த பூர்த்தி போன்ற விழாக்களில் கூட அத்யாபகர்களைக் கொண்டே நாலாயிர திவ்யப்ரபந்த ஸேவை சாற்றுமுறை நடத்திக் கொள்கின்றவர்கள் இப்படிக் கூறுவதுதான் வியப்பிற்குரியது. அதுவும் பாசுரங்கள் மூலம் கூடத் தெரிந்து கொள்ளாதவர்கள் தங்களுக்குத்தான் ஸ்ரீவைஷ்ணவத்வபூர்த்தி இருப்பதாக நினைத்துக்கொண்டு, மற்றவர்களுக்கு ஸ்ரீவைஷ்ணவத்வம் இல்லை என்பதுபோல் பேசுவதும் எழுவதும் சரிதானா என்று அவரவர்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும். ஸ்ரீ வசனபூஷணம், ஆசார்யஹ்ருதயம் முதலிய கிரந்தங்களில் சொல்லப்பட்ட ஸ்ரீவைஷ்ணவ லக்ஷணங்கள் அனைத்தும் தத்தமக்கு அமையவேண்டும் என்று ஒவ்வொரு ஸ்வாநுஷ்டானம் செய்வதற்காக வலியுறுத்தப்படுகிறதே தவிர, மற்றவர்களைச் சுட்டிக்காட்டி, "இந்த லக்ஷணங்கள் உங்களுக்கில்லை" என்று குறை கூறுவதற்காக அந்த கிரந்தங்கள் ஏற்பட்டவை அல்ல என்பதும் உணர வேண்டிய விஷயம்.

புத்தக விமர்சனம்

அருளிச் செயல் அனுபவம் (ஆசிரியர் ஸ்ரீ உ. வே. K வரதாசாரியார் ஸ்வாமி 15, தம்பு செட்டி தெரு, சென்னை பக்கம் 156. விலை ரூ 10. தபால்மூலம் அனுப்பட்ட மாட்டாது ஆசிரியரிடம் நேரிலேயே பெற்றுக்கொள்ளலாம்).

ஆழ்வார்கள் அருளிச் செய்துள்ள நாலாயிரம் பாசுரங்களிலும் எம்பெருமானைப் பல விதமாக அனுபவித்துள்ளனர். ஒருசிலவிடங்களில் ரிஷிகளும் கூடச் சொல்லாதவற்றை ஆழ்வார்கள் கூறுகின்றனர். இவையெல்லாவற்றையு நாம் தெரிந்து கொள்ள வேண்டுமானால் நாலாயிரம் பாசுரங்களையும் அர்த்தத்தோடு நெஞ்சிலே தரித்துக் கொண்டால்தான் முடியும். ஆனால் நாம் அவ்வளவு சிரமப்பட வேண்டாமல் ஸ்ரீ உ. வே. வாக்அம்ருதவர்ஷி வேளுக்குடி K. வரதாசாரியார் ஸ்வாமி தலைப்பு வாரியாகப் பிரித்து ஒவ்வொரு தலைப்பின் கீழும் ஆழ்வார்கள் அருளிச் செய்துள்ள பாசுரங்கள் அனைத்தையும் தொகுத்துத் தந்துவிடுகிறார் இப்புத்தகத்தில். உதாரணமாக எம்பெருமான் கருடனை வாஹனமாக வுடையவன் என்று எங்கெங்கெல்லாம் ஆழ்வார்கள் பன்னிருவரும் பாடியிருக்கிறார்களோ அவை (64 இடங்கள்) அனைத்தையும் ஓரிடத்திலே தொகுத்துக் கொடுத்திருக்கிறார்.

அருளிச் செயல் அனுபவம் — இடைப்பகுதியின் முதல் பாகமான இப்புத்தகத்தில் பரத்வாதி பஞ்சகம் என்று எம்பெருமானுடைய ஐந்து நிலைகளைப் பற்றிய பாசுரங்கள் தொகுக்கப் பட்டுள்ளன. பரத்வம் என்ற தலைப்பின் கீழ் எம்பெருமானுடைய மேன்மையைப் பலவாறு விளக்கும் பாசுரங்களும், வ்யூஹம் அந்தர்யாமி நிலைகளைப் பற்றிய பாசுரங்களும், விபவம் என்ற தலைப்பின் கீழ் மத்ஸ்யாவதாரம் தொடங்கி பரசுராமாவதாரம் வரையுள்ள பாசுரங்களும் தொகுக்கப்பட்டுள்ளன. அனுபந்தமாக உபந்யாஸகர்கள் அடிக்கடி எடுத்தாளக்கூடிய பாசுரங்கள் (580) தொகுக்கப்பட்டிருக்கின்றன. ஆங்காங்கே சிறுசிறு விளக்கம் அளித்திருக்கலாம். அவசியம் ஒவ்வொரு ஸ்ரீவைஷ்ணவரிடமும் இருக்கவேண்டிய நூல் இது. குறிப்பாக உபந்யாஸகர்களுக்கு மிகவும் பயன்படக்கூடிய நூல்.

உத்ஸவ விவரங்கள்

ஆவணி	ஆக	
2	18	திருவல்லிக்கேணி அழகியசிங்கர் ஜ்யேஷ்டாபிஷேகம்
6	22	திருவல்லிக்கேணி பவித்ரோத்ஸவம் ஆரம்பம்
[illegible]	[illegible] செப்	
18	3	ஸ்ரீஜயந்தி பெரியவாச்சான்பிள்ளை திருநக்ஷத்ரம்
19	4	உறியடி

23-8-88 }
6-9-88 } ஏகாதசி

10-9-88 அமாவாஸ்யை
11-9-88 சூர்யக்ரஹணம்
(காலை 7-20 முதல் 10-20 வரை)

Printed at Guru Achagam, 19, Irusappa Gramani Street,, Triplicane, Madras-600 005. Edited and Publised by Dr. M. A. Venkata Krishnan. 7, South Mada Street, Triplicane, Madras-5

GEETHACHARYAN T. N. M. S. (C) 845
Licence No, TNMS/PP/31

Printed at Guru Achagam, 19, Irusappa Gramani Street
Triplicane, Madras 600 005. Phone : 8